இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 206 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 24 – வியாழக்கிழமை 07 மார்ச் 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 206 : Thiruvalluvar Year - 2055 - Maasi 24 - Thursday 07 March 2024 - Dak 8 Pages ₹ 5.00

## “உங்கள் நலனைக் காக்கவே நான் உழைக்கிறேன் !

# அதன் மற்றுமோர் அடையாளம்தான் ‘நீங்கள் நலமா’ திட்டம்!”




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (6.3.2024) முகாம் அலுவலகத்திலிருந்து, முதல்வரின் முகவரி துறையின் கீழ், பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறியும் புதுமை திட்டமான “நீங்கள் நலமா” என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ முதலமைச்சரின் செயலாளர் நா. முருகானந்தம், முதல்வரின் முகவரித்துறை சிறப்பு அலுவலர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, மார்ச் 7-**

**உங்கள் நலனைக் காக்கவே நான் உழைக்கிறேன்; அதன் மற்றுமோர் அடையாளம்தான் “நீங்கள் நலமா?” திட்டம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நாள்தோறும் பார்த்துப் பார்த்து எத்தனையோ முத்திரைத் திட்டங்களைத் தொடங்கியுள்ளோம். அப்படியொரு திட்டம்தான் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள ‘நீங்கள் நலமா?’ என்ற புதிய திட்டம்!

புதிய திட்டத்தின் இந்தத் தலைப்பே, மக்களின் மீதான எங்களது கனிவான சிந்தனையை, அன்பான அக்கறையைக் காட்டும். தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நலமாக இருக்க வேண்டும் என்பதுதான் இந்தத் திட்டத்தின் முதன்மையான நோக்கம். மக்கள் நல்வாழ்வுக்காக வகுக்கப்படும் திட்டங்களின் பயன்கள் உங்களுக்கு என இப்படி நான் அடுக்கிக்கொண்டே இருக்க முடியும். இந்தத் திட்டங்கள் அனைத்தும் கோடிக்கணக்கான மக்களை மகிழ்வித்து வரும் திட்டங்கள். இவை அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் அது ஒவ்வொரு குடும்பத்தையும் ஒவ்வொரு தனிமனிதரையும் மேம்படுத்தும் திட்டங்களாகும்.

### மக்களின் மகிழ்ச்சியே அரசுத் திட்டங்களின் வெற்றி!

நமது திராவிட மாடல் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களால் பலன் அடையாதவரே இல்லை. நான் செல்லும் இடங்களில் எல்லாம் என்னைச் சந்திக்கும் மக்கள் முகங்களில் பார்க்கும் மகிழ்ச்சியில் இத்திட்டங்களின் வெற்றியைக் காண்கிறேன்.

பயன் பெற்ற மக்களின் புள்ளிவிவரம் எனப் பார்த்தால்,

★ “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்” மூலம் ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிர் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையாகப் பெறுகிறார்கள்.

## பொய் பேசும் பிரதமர் மோடி !

**சில நாட்களுக்கு முன்னால் சென்னைக்கு வந்து பேசிய மாண்புமிகு பிரதமர் மோடி அவர்கள், மாநில அரசுக்குத் தராமல் மக்களுக்கு நேரடியாக நிதி வழங்கி வருவதாக அப்பட்டமான ஒரு பொய்யைச் சொல்லி விட்டுச் சென்றுள்ளார்கள். எந்த மக்களுக்குக் கொடுத்தார் என்பதைச் சொல்லி இருந்தால் அந்த மக்களுக்குக் கிடைத்ததா என்று கேட்கலாம். இரண்டு மாபெரும் இயற்கை பேரிடரை எட்டு மாவட்டத்து மக்கள் சந்தித்தார்கள். இதற்காக 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதி கேட்டோம். அதற்கு 1 ரூபாயையாவது ஒதுக்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு உதவி செய்தாரா பிரதமர்? இப்படியா பொய்களைச் சொல்வது?**

வந்து சேர்வதை உறுதி செய்வதற்காக இந்த “நீங்கள் நலமா” என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன்.

இதற்கு முன்பு தொடங்கி வைத்து மக்களின் வாழ்வினை மேம்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்களைப் பட்டியலிட வேண்டுமென்றால்,

★ மகளிர் விடியல் பயணம்

★ புதுமைப் பெண்

★ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

★ கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்

★ இல்லம் தேடிக் கல்வி

★ மக்களைத் தேடி மருத்துவம்

★ ஒலிம்பிக் தேடல்

★ நான் முதல்வன்

★ உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

★ முதல்வரின் முகவரி

★ கள ஆய்வில் முதலமைச்சர்

★ “விடியல் பயணத் திட்டம்” மூலம் மகளிர் 445 கோடி முறை பயணித்து மாதம் ரூ.888 வரை சேமித்துப் பயனடைகின்றனர்.

★ “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தால் ஒரு கோடிப் பேர் இதுவரை பயனடைந்து உள்ளனர்.

★ முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் நாள்தோறும் 16 லட்சம் மாணவர்கள் வயிறார காலைச் சிற்றுண்டி உண்கிறார்கள்.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரிலான “புதுமைப்பெண்” திட்டத்தின் பயனாக 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெற்று பட்டதாரிகளாக உருவாகப் போகிறார்கள்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# முதல்வரின் பெண்கள் நலத் திட்டங்கள் - பெருமை பேசும் ஆவணங்கள்!

## பெண்கள் சமுதாயம் வரவேற்பு!

சென்னை, மார்ச் 7-

“மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல; மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் மகளிர் சமுதாயத்தின் முக்கியத்துவத்தினை மிக அழகான கவிதை வரிகளில் பாடியுள்ளார்.

இத்தகைய பெருமைக்குரிய மகளிர் சமுதாயம் வீட்டிற்குள் அடக்கி வைக்கப்பட்டிருந்த கொடுமையை எதிர்த்து தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் போராடியதன் விளைவாக பெண்கள் சமுதாயம் இன்று எழுச்சிப் பெறத் தொடங்கியுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக வீற்றிருந்த காலத்தில்பெண்கள்முன்னேற்றத்திற்கான கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்பு, சொத்துரிமை, உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு, மகளிர் திட்டம் - மகளிர் சுய உதவிக்குழுக்கள் முதலான பல திட்டங்களை நிறைவேற்றினார். இத் திட்டங்களால் பெண்கள் வாழ்வில் உயர்ந்து பொருளாதார விடுதலை பெற்றுள்ளனர்.

உலகெங்கும் உழைக்கும் மகளிர் போராடி உரிமை பெற்ற நன்னாள் என மார்ச் 8ஆம் நாள் மகளிர் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மகளிர் சமுதாய முன்னேற்றத்திற்காக ஆற்றியுள்ள திட்டங்களை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாகும்.

**பெண்களை அர்ச்சகர்களாக்கி, ஓதுவார்களாக்கி சாதனை”**

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிறப்பால் மனிதர்கள் அனைவரும் சமம் என்பதைக் கூறி, ஆண், பெண் என்ற வேறுபாட்டை நீக்கி 3 பெண்களை அர்ச்சகர்களாக நியமித்து, 5 பெண்களை ஓதுவார்களாகப் பணியில் அமர்த்தி அதிரடி சாதனை படைத்துள்ளார்.

**“பெண்களுக்கான கட்டணமில்லாப் பேருந்து திட்டம்”**

சமூகத்தில் பெண்களுக்கான உரிமையை நிலைநாட்டுவதில் திமுக அரசு முனைப்புடன் செயல்படும் என்றும், ஆண்களுக்கு நிகரான சமநிலையைப் பெண்கள் விரைவில் அடைவார்கள் என்றும் எப்போதும் சொல்லிவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2021 சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பெண்களுக்கான கட்டணமில்லாப் பேருந்து பயணம் உள்படமுக்கியத்திட்டங்களில் கையெழுத்திட்டு மக்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளார்.

குறிப்பிட்ட தூரம் அல்லது நகரங்களுக்குள் இயக்கப்படும் சாதாரண கட்டணப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்யும் இந்தத் திட்டம் மக்களிடையே அதிகம் பேசப்படும் திட்டமாக உள்ளது. இதனால் பெரிதும் பயனடைந்துள்ளதாக வேலைக்குச் செல்லும் மகளிர் பலரும் தெரிவித்து வருகின்றனர். நாள் ஒன்றுக்கு சராசரியாக 40 லட்சம் பெண்கள் கட்டணமில்லாப் பேருந்து பயணம் - விடியல் பயணம் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

**“புதுமைப் பெண் திட்டம்”**

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று பின்னர் உயர்கல்வி பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் வகையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி “புதுமைப் பெண் திட்டம்” முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால்

5-9-2022அன்றுதொடங்கி வைக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற மாணவிகள் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து, தமிழ்நாட்டில்உயர்கல்விபயில்பவராக இருத்தல் வேண்டும். தனியார் பள்ளிகளில், கல்வி உரிமை சட்டத்தின் கீழ் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயின்று பின் 9 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்த மாணவிகளும் இத்திட்டத்தின் கீழ் பயனடையலாம்.

எதிர்காலத் தலைமுறையின் வளர்ச்சிக்கான முதலீடாக “புதுமைப் பெண்” திட்டத்தினைப் பார்ப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நிலையில், இத்திட்டத்தின் மூலம் நடப்பாண்டில் மாதந்தோறும் 2.73 லட்சம் மாணவிகள் பயனடைகின்றனர். மேலும் இந்த முயற்சியின் விளைவாக நடப்புக் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பயின்று, கல்லூரிகளில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது.

**“கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்”**

வீட்டில் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி உழைக்கும் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் கடந்தஆண்டுசெப்டம்பர்மாதம் தொடங்கி வைக்கப்பட்டு பெண்களின் ஆதரவைப் பெற்றுள்ளது. இத்திட்டம் குறித்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் அண்மையில் வெளியிடப்பட்ட 2023 - 24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்படி, நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம், சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியும் மகளிர் எனப் பல்வேறு வகைகளில் தங்களது விலை மதிப்பில்லா உழைப்பை வழங்கி வரும் பெண்களும் இத்திட்டத்தால் பயன்பெறுகின்றனர்.

தமிழ்நாட்டுப் பெண்களிடையே இத்திட்டத்திற்குக் கிடைத்துள்ள ஆதரவைப் பார்த்து, வேறு பெயர்களில் தங்கள் மாநிலங்களிலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த பிற மாநில அரசுகள் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இத்தகைய சிறப்பான திட்டங்களால் மகளிர் சமுதாயம் அடைந்து வரும் முன்னேற்றம், தன்னம்பிக்கை உணர்வு, சமத்துவச் சிந்தனை இவையெல்லாம் பெண்களின் பெருமை பேசும் ஆவணங்களாகத் திகழ்கின்றன என அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடு முழுவதும் மார்ச் 10ல் ரயில் மறியல் போராட்டம் - விவசாயிகள் அறிவிப்பு!

*புதுடெல்லி, மார்ச் 7-*

*கோரிக்கைகள் நிறைவேறும் வரை முற்றுகை போராட்டம் தொடரும் என்று விவசாயிகள் அறிவித்து நேற்று மாலை போராட்டத்தை தொடங்கினர். இந்நிலையில் வருகிற மார்ச் 10ந் தேதி அன்று நாடு முழுவதும் ரயில் மறியலில் ஈடுபட போவதாக விவசாயிகள் அறிவித்துள்ளனர்.*

*பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான டிராக்டர்களில் சென்ற விவசாயிகள் மீது துணை ராணுவம் மற்றும் போலீசார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் பேரணியை தடுத்தனர். சம்பு பகுதியில் ரப்பர் குண்டு தாக்குதலில் இளம் விவசாயி ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்து போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்நிலையில் நேற்று மீண்டும் டெல்லி நோக்கிய பேரணியை விவசாயிகள் தொடங்கினர்.*

*நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் பேருந்து, ரயில்களில் மூலமாக போராட்டக்களத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனிடையே பேரணியை தொடங்குவதற்கு முன்னர் பஞ்சாப் விவசாயிகள் பொற்கோயிலில் வழிபாடு நடத்தினர். தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 10ம் தேதி நாடு முழுவதும் நண்பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை ரயில் மறியலில் ஈடுபட போவதாகவும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.*

## டிசம்பர் 2023ல் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

# சேதமடைந்த வீடுகளைப் பழுது நீக்க ரூ.45.84 கோடி நிவாரணம்!

## அரசு செய்தி வெளியீடு!

*சென்னை, மார்ச் 7-*

*தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-*

*கடந்த 2023, டிசம்பர் மாதம் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் காரணமாக செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களும் அதிக கனமழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் இம்மாவட்டங்களில் வசித்து வந்த பெரும்பாலான ஏழை மக்களின் வீடுகள் பெரிதும் சேதமுற்றன.*

*அவ்வாறு மழைவெள்ளத்தினால் பகுதியாக சேதமடைந்த வீடுகளை பழுது பார்ப்பதற்கு ரூ.2.00 இலட்சம் வரையும் முழுமையாக சேதமடைந்த வீடுகளை மீண்டும் புதிதாக கட்டுவதற்கு ரூ.4.00 இலட்சம் வரையும் நிவாரணமாக வழங்கப்படும் என முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.*

*இவ்வறிவிப்பிற்கிணங்க, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பகுதியாக மற்றும் முழுமையாக சேதமடைந்த 955 வீடுகளுக்கு பழுது நீக்கம் செய்யவும் மற்றும் புதிய கட்டுமானத்திற்கும் ரூபாய் 24.22 கோடியும், பேரூராட்சி பகுதிகளில் உள்ள 577 சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.21.62 கோடியும் ஆகமொத்தம் ரூ.45.84 கோடி வழங்கி முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.*

*இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 07-03-2024

# எல்லாம் தெரிந்த கால்டுவெல்லும் எதுவும் தெரியாத ஆர்.என்.ரவியும்!

“கால்டுவெல்லும் ஜி.யு.போப்பும் பள்ளிப் படிப்பே படிக்கவில்லை” என்று 200 ஆண்டுகளுக்குப் பிறகு கண்டுபிடித்திருக்கிறார் ஆர்.என். ரவி. அவர் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருப்பதாகவும், அவர் காலடியில் கால்டுவெல்லும் போப்பும் நின்று கொண்டிருப்பதாகவும் ஒரு நாளிதழ் கார்ட்டூன் போட்டுள்ளது.

**ஏழு மொழிகளைக் கற்றும் 15 மொழிகளில் வேர்ச்சொல் காட்டியும் சொல்லாய்வு செய்த திராவிட மொழி நூல் ஞாயிறு தேவநேயப் பாவாணர் எழுதினார். “தமிழர் தொன்மையை உலகிற்கு அறிவித்தார் கால்டுவெல் பெருமகனார். தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர்! செடியாகத் தழைக்கச் செய்தவர் நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகள்! நானோ அதனை மரமாக வளர்த்து வருகிறேன்” - என்பார் பாவாணர். இதெல்லாம் ஆரியக் கூட்டத்துக்கு எப்படித் தெரியும்?**

ஏன் இவர்களுக்கு கால்டுவெல் மீது கோபம்? எல்லா மொழிகளும் சமஸ்கிருதத்தில் இருந்து வந்தவை என்று ஆரியக் கும்பல் புரூடா விட்டுக் கொண்டிருந்தபோது, ‘இதில் இருந்து தனித்த அடையாளம் கொண்டது தமிழ். திராவிட மொழிக் குடும்பத்துக்கும் சமஸ்கிருதத் துக்கும் தொடர்பில்லை’ என்று நிறுவியவர் கால்டுவெல். தமிழ் தனித்த மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்று சொன்னதால் கால்டுவெல் மீது இவர்களுக்கு கோபம். அவர் அதை எழுதாமல் போயிருந்தால் எல்லாமே சமஸ்கிருதத்தில் இருந்து வந்ததாக அவித்து தட்டி இருப்பார்கள்.

**திராவிட மொழிகள் ஒரு மொழியின் வட்டார வழக்குகள் அல்ல. திராவிட மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து தனித்து நிற்பவை. ஆரியருக்கு முன் வாழ்ந்தோருடன் தொல் திராவிடர் கொண்டிருந்த அரசியல் சமூக உறவுகள், திராவிடர்களின் ஆரியத்துக்கு முந்தைய நாகரிகம், திராவிட இலக்கியங்களின் பழமை ஆகியவை பற்றி விரிவாக எழுதியவர் கால்டுவெல் என்பதால்தான் அவர்களுக்குத் தீராத கோபம்.**

**குமரி முனைக்கு தென்பகுதியில் தோன்றிய தமிழர்கள், இந்தியா முழுவதும் பரவினார்கள். இந்தத் தமிழரை வடமொழிக்காரர்கள் ‘திராவிடர்’ என்று அழைத்தனர் என்று கண்டு பிடித்தவர் கால்டுவெல். ஆரிய இலக்கணத்தில் இருந்தே தமிழ் இலக்கணம் உருவாக்கப்பட்டதாகச் சிலர் கதை விட்டார்கள். இதை மாற்றி தமிழுக்கு தனி இலக்கணம் உண்டு என்றும், ஆரிய இலக்கணம் வேறு, தமிழ் இலக்கணம் வேறு - என்றும் சொல்லி தலைக்கனத்தை உடைத்தவர் கால்டுவெல்.**

1814 ஆம் ஆண்டு அயர்லாந்தில் பிறந்தவர் கால்டுவெல். அங்குள்ள கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் படித்தவர். இலண்டன் மிஷனரியில் சேர்ந்தார். கிறித்துவம் பரப்புவதற்காகத் தான் 1838 ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தார். 1841 முதல் நெல்லை மாவட்டம் இடையன்குடியில் தங்கி கிறித்துவப் பணியைச் செய்தார். இயல்பிலேயே மொழியியல் மீது ஆர்வம் கொண்டவராக இருந்ததால் தமிழ் கற்கத் தொடங்கினார். அது முதல் தமிழ்த் தொண்டை தொடங்கினார்.

A Comparative Grammar of the Dravidian or South Indian Family Languages என்ற நூலை 1856 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டார். ‘திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்’ என்று இதற்குப் பெயர். இவை மட்டுமல்ல; பல்வேறு புகழ்பெற்ற நூல்களை அவர் எழுதினார்.

⋆ A Political and General History of Tinnevelly, 1881- திருநெல்வேலி வரலாறு

⋆ The Tinnevelly Shanars: A Sketch of - Their Religion, and Their Moral Condition and Characteristics, as a Cast; with Special Reference to the Facilities and Hindrances to the Progress of Christianity Among Them, 1849 - திருநெல்வேலி நாடார்கள் பற்றிய குறிப்புகள்

⋆ The Inner Citadel of Religion - 1879 மதத்தின் உள்வீடு

⋆ The March of the Unsaved A religious tract. - 1896 - மதத்தின் வழியில்

⋆ Observations on the Kudumi 1867 குடுமிகள் பற்றி

⋆ The Relation of Christianity to Hinduism 1885. - கிறித்துவத்துக்கும் இந்து மதத்துக்கும் இடையேயான தொடர்பு - ஆகிய புத்தகங்களை ஆங்கிலத்தில் எழுதினார். தமிழிலும் பல்வேறு புத்தகங்களை அவர் எழுதி இருக்கிறார். நற்கருணை தியான மாலை, தாமரைத் தடாகம், ஞான ஸ்நானம், நற்கருணை, பரதகண்ட புராதனம் ஆகியவை அவர் எழுதிய தமிழ் நூல்கள். இதில் எதையாவது படித்திருப்பாரா ஆளுநர்? கால்டுவெல் பள்ளிப் படிப்பு படித்தால் என்ன? படிக்காமல் போனால் என்ன? அவர் புத்தகத்தை சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது.

**மூன்று முறை அவரது நாட்டுக்குப் போனார். அங்கேயே இருந்து விடாமல் தமிழ்நாடு திரும்பினார் கால்டுவெல். 77 ஆவது வயதில், 1894 ஆம் ஆண்டு கொடைக்கானல் மலையில் அவர் மறைந்தார். உடலை இடையன்குடியில் அடக்கம் செய்தார்கள். 53 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர் அவர். தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன்பே இலத்தீன், கிரேக்கம், ஹீப்ரூ, ஜரிஷ், ஸ்காட்டிஷ், ஜெர்மன், போர்ச்சுக்கல், ஸ்பானியம் ஆகிய மொழிகளைக் கற்றவர் கால்டுவெல் என்கிறார் தமிழ் மொழியியல் அறிஞர் பா.ரா.சுப்பிரமணியம். இதெல்லாம் ஆளுநருக்குத் தெரியுமா?**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2024) முகாம் அலுவலகத்திலிருந்து, முதல்வரின் முகவரி துறையின் கீழ், பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துகளைக் கேட்டறியும் புதுமை திட்டமான “நீங்கள் நலமா” என்ற திட்டத்தை தொடங்கி வைத்து, பயனாளிகளிடம் நேரடியாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் – முதலமைச்சரின் செயலாளர் – நா. முருகானந்தம், முதல்வரின் முகவரித்துறை சிறப்பு அலுவலர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பேரறிஞர் அண்ணா தலைமையில் கழக ஆட்சி அமைத்த நாள்!

# மீண்டும் வரலாறு படைப்போம்! நாட்டைக் காப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் உறுதி!

**சென்னை, மார்ச் 7-**

**பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சி அமைத்த நாள் என்றும் இந்நாளில் மீண்டும் வரலாறு படைப்போம்! நாட்டைக் காப்போம் என்றும் பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க. ஆட்சி அமைந்த நாளை முன்னிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் உறுதியுடன் குறிப்பிட்டுள்ளார்.**




இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:-

**மார்ச் 6! இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு மாநிலக் கட்சி தேர்தலில் வென்று ஆட்சியமைத்த நாள்!**

**பேரறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளம்படை தெற்காசிய ஜனநாயக வரலாற்றில் ஓர் அமைதிப்புரட்சியை நிகழ்த்திக் காட்டிய நாள்!**

**அன்று தமிழ்நாட்டைக் காத்தோம்! இன்று மொத்த இந்தியாவின் கூட்டாட்சித்தன்மையையும் பன்முகத்தன்மையையும் மதச்சார்பின்மையையும் காக்க வேண்டிய பெரும் பொறுப்பை நம் தோள்களில் சுமக்கும் அளவுக்கு நம் வலிமை கூடியுள்ளது.**

**மீண்டும் வரலாறு படைப்போம்! நாட்டைக் காப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

# “மற்றவர்கள் மீது பழிபோடுவதற்குப் பெயர்தான் மோடி பார்முலாவா?”

## அமைச்சர் எஸ்.இரகுபதி கேள்வி!

நாகர்கோயில், மார்ச் 7-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் - சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி நேற்று முன்தினம் (05-03-2024) நாகர்கோயில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது மற்றவர்கள் மீது பழி போடுவதற்குப் பெயர்தான் மோடி பார்முலாவா? எனக் கேள்வி எழுப்பினார்.

செய்தியாளர்களுக்கு அமைச்சர் எஸ்.இரகுபதி அளித்த பேட்டி வருமாறு:

போதைப்பொருட்களைத் தடுப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 10.08.2022 அன்று மாநில அளவிலான காவல் துறை அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள் கூட்டத்தைக் கூட்டி போதைப்பொருளே தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது என்பதற்கான நடவடிக்கையை எடுத்தார். கஞ்சா பயிரிடப்படாத பூமியாக உள்ளது தமிழ்நாடு.

பள்ளி, கல்லூரிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுப் போதைப்பொருள் தடுப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. போதைப்பொருள் நடமாட்டம் இருந்தால் உடனடியாகத் தடுக்கப்பட்டு, காரணமானவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அமைச்சரே குட்கா வியாபாரத்தில் உடந்தையாக இருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. அமைச்சராக இருந்தவர் மீது வழக்குத் தொடர ஆளுநர் அனுமதி தந்துள்ளார். அப்படிப்பட்ட ஆட்சி அப்போது நடைபெற்றது.

தமிழ்நாட்டில் கஞ்சா கடத்தல், போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட தொழில்களில் ஈடுபட்டவர்கள் 14 பேருக்குச் சிவப்புக் கம்பளம் விரித்துத் தங்கள் கட்சியில் சேர்த்துள்ளது பா.ஜ.க. அகில இந்தியளவிலேயே பா.ஜ.க. வில்தான் இதுபோன்ற தொழில்களில் ஈடுபடுபவர்கள் உறுப்பினர்களாக அதிகம் இருக்கிறார்கள்.

பிரதமர் மோடியின் சொந்த மாநிலம் குஜராத். இன்றைக்கு போதைப்பொருள் நடமாட்டம் என்பது அதிகமாக இருப்பது அவரது குஜராத்தில்தான். இப்படி எல்லாவற்றிற்கும் உடந்தையாக இருந்துவிட்டு, மற்றவர்கள்மீது பழிபோடுவதற்குப் பெயர்தான் மோடி பார்முலாவா? என கேட்க விரும்புகிறோம்.

ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா, வட கிழக்கு மாநிலங்களில் போதைப்பொருள் பயிரிடப்படுவதாகத் தகவல் உள்ளது. தமிழ்நாட்டு மக்கள் ஏமாளிகள் அல்ல, தமிழ்நாட்டு மக்கள் மீது தேர்தலுக்காகப் பழி போடுவதை பொறுத்துக் கொள்ளமாட்டார்கள்.

விமான நிலையம், துறைமுகங்களையெல்லாம் தனியாருக்குத் தாரைவார்த்து விட்டது ஒன்றிய பா.ஜ.க அரசு. தனியாருக்குத் தாரை வார்த்தால் கட்டுப்பாடு தனியாரிடத்தில்தான் இருக்கும், அதற்குத்தான் தனியார்மயத்தை எதிர்க்கிறோம். தனியாரிடமிருந்து



வாங்கியது அன்றைய ஒன்றிய அரசு, தனியாருக்கு இன்றைய ஒன்றிய அரசு கொடுப்பதற்குப் பெயர் மோடி பார்முலாவா? மோடியிசமா?

2019-இல் 11,418 கிலோ, 2020-இல் 15,144 கிலோ, 2021-இல் 20,431 கிலோ, 2022-இல் 28,381 கிலோ, 2023-இல் 23,364 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 2022-இல் 2,016 வழக்குகள் போடப்பட்டதில் 1,916 வழக்குகள் அதாவது 80% வழக்குகளில் தண்டனை பெற்றுள்ளனர். 418 வழக்குகளில் விடுதலையாகியுள்ளனர். 2023-இல் 3,567 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதில் 2,988 வழக்குகளில் தண்டனை பெற்றுத்தரப்பட்டுள்ளது, 579 வழக்குகளில் விடுதலையாகியுள்ளனர்.

தமிழ்நாட்டு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தண்டனை பெற்றுத்தருவதில் தயக்கம் காட்டுவது கிடையாது. வருங்கால சந்ததியினரைப் பாழாக்கிவிடும் என்பதால் போதைப்பொருட்களைத் தடுப்பதற்கு முழுக் கவனம், முழு சக்தியையும் செலுத்தி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

### போதைப் பொருள் வழக்கில் பா.ஜ.க.வினர்!

பா.ஜ.க.வைச் சேர்ந்த 14 பேர் மீது போதைப்பொருள் தொடர்பாக 23 வழக்குகள் உள்ளது. அவர்கள் குறித்த பட்டியல்

1. சரவணன், உறுப்பினர்
2. ராஜேஷ், சென்னை 109-ஆவது வட்ட தலைவர்.
3. விஜய நாராயணன், மத்திய சென்னை மேற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்
4. விஜயலட்சுமி, செங்கல்பட்டு வடக்கு மாவட்டத் தலைவர்
5. மணிகண்டன், தாழ்த்தப்பட்டோர் பிரிவு மண்டல தலைவர்
6. ஆனந்த ராஜேஷ், திருவள்ளூர் மேற்கு மாவட்ட எஸ்.சி./ எஸ்.டி. மாவட்ட துணைத் தலைவர்
7. ராஜா, காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர் நலன் அபிவிருத்தி பிரிவு செயலாளர்
8. குமார் எ குணசீலன், உறுப்பினர்
9. மணிகண்டன், உறுப்பினர்
10. லிவிங்கோ அடைக்கலராஜ், பெரம்பலூர் மாவட்ட முன்னாள் செயலாளர்
11. சிதம்பரம் எ குட்டி, தஞ்சாவூர் வடக்கு மாவட்ட துணைத்தலைவர்
12. ராஜா, விவசாய பிரிவு மாநிலச்செயலாளர்
13. சத்யா எ சத்யராஜ், உறுப்பினர்
14. காசிராஜன், மதுரை நகர இளைஞர் பிரிவு செயலாளர்

அண்ணாமலை பா.ஜ.க.வில் உள்ள நபர்களிடம் போதைப்பொருள் நடமாட்டத்தை முதலில் தடுக்கட்டும். அதே போல் குஜராத்திலும் தடுக்கட்டும். பா.ஜ.க. ஆளும் பிற மாநிலங்களிலும் போதைப்பொருள் நடமாட்டத்தைத் தடுக்கட்டும். அதன் பிறகு அவர் தமிழ்நாட்டில் போதைப்பொருள் தடுப்பதை மக்கள் இயக்கமாக மாற்றுவதைப் பார்க்கட்டும்.

போதைப்பொருள் கடத்துவது குறித்து தி.மு.க. விற்குத் தெரிந்திருக்க வாய்ப்பே கிடையாது. எங்களுடைய நோக்கம் அதைத் தடுக்க வேண்டும் என்பதுதான். போதைப்பொருள் நடமாட்டம் குறித்து அண்ணாமலைக்கு வேண்டுமானால் தகவல் தெரிந்திருக்கும். அதை அவர் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

தி.மு.க.வில் இருக்கும் உறுப்பினர் மீது ஒரு குற்றச்சாட்டு வந்தால் உடனடியாக அவர்களைக் கட்சியில் இருந்து நீக்கிவிடுகிறோம். குற்றப் பின்னணி உடையவர்களைக் கட்சியில் வைத்து அரசியல் செய்ய வேண்டும் என்ற அவசியம் தி.மு.க. விற்கு என்றும் கிடையாது.

இல்லம் தேடிக் கல்வி என்ற திட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையில் முன்னாள் அமைச்சர் விஜய பாஸ்கர், இல்லம் தேடி குட்கா என பேசியுள்ளார். ஆனால் அவர் மீதே வழக்கு உள்ளது என்பதை மறந்து விட்டுப் பேசியுள்ளார்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியுள்ளார்.

# ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறும் வகையில் திட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!... முதல் பக்கத் தொடர்ச்சி

★ ‘நான் முதல்வன்’ திட்டத்தில் 2 ஆண்டுகளில், 28 லட்சம் இளைஞர்கள் தங்களது திறனை மேம்படுத்திப் பயன டைந்துள்ளனர்.

★ ‘இல்லம் தேடிக் கல்வி’ திட்டத்தில் 24 லட்சத்து 86 ஆயிரம் பள்ளிக் குழந் தைகள் பயனடைந்திருக்கிறார்கள்.

★ 62 லட்சத்து 40 ஆயிரம் குடும் பங்கள் புதிய குடிநீர் இணைப்பைப் பெற் றுள்ளன.

★ 2 லட்சம் உழவர்கள் புதிதாக இல வச மின் இணைப்பு பெற்றுள்ளார்கள்.

★ உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தில் 30 இலட்சம் முதியோரும் 5 இலட்சம் மாற் றுத்திறனாளிகளும் மாதந்தோறும் பயன டைகின்றனர்.

★ ‘நம்மைக் காக்கும் 48’ திட்டத் தால் 2 லட்சம் பேரின் உயிர்கள் காப்பாற் றப்பட்டுள்ளன.

★ ’முதல்வரின் முகவரி’ திட்டத்தி னால் 19 லட்சத்து 69 ஆயிரம் பேர் பயன டையும் வகையில் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

★ ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தின் மூலமாக, 3 லட்சத்து 40 ஆயிரம் மனுக் களுக்குத் தீர்வு காணப்பட்டு உள்ளது.

இப்படி, தமிழ்நாட்டில் வாழும் ஒவ் வொரு குடும்பமும் பயனடையும் வகை யில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வெற்றி கண்டுள்ளது நமது திராவிட மாடல் அரசு.

எங்களைச் சிலர் குடும்ப ஆட்சி என்று சொல்கிறார்கள். ஆம் இது குடும்ப ஆட்சி தான்! தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத் தையும் கை தூக்கிவிடும் ஆட்சி இது!

ஆட்சிக்கு வந்த ஓராண்டு காலத்தில் ஏராளமான மனுக்கள் என்னைத் தேடித் தேடி வழங்கப்பட்டது. அப்படி வழங்கப் பட்ட கோரிக்கைகளை நமது அரசு நிறை வேற்றிக் கொடுத்த காரணத்தால் - இப் போது நான் செல்லும் பயணங்களில் மக்களின் கைகளில் மனுக்களைக் காண முடியவில்லை; மாறாக, அவர்களது முகங்களில் மகிழ்ச்சியைக் காண்கிறேன்!

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட வலைத்தளத்தை நான் இன்று தொடங்கி வைத்து ஒரு சில பயனா ளிகளிடம் உரையாடி அவர்களின் கருத்து களைக் கேட்டறிந்தபோது உளம் மகிழ்ந் தேன். ஒவ்வொரு குடும்பத்தினரது குரலையும் கேட்டு அவர்களது குறைக ளைப் போக்கும் அரசாகத் திராவிட முன் னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது.

அதேபோல அமைச்சர்கள், உயர் அலு வலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோ ரும் உங்களிடம் கலந்துரையாடி நடைமு றைப்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள் ஒவ்வொரு திட்டமும் எந்த நோக்கத்துக் காக அறிவிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டு வருகிறதா என்பது தான் எனக்கு முக்கியம்!

### ஒவ்வொருவருக்கும் அரசின் திட்டங்கள் சென்று சேர வேண்டும்!

ஏனென்றால் ஒவ்வொரு திட்டமும் பல் லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலானவை. கடுமையான நிதி நெருக்கடிச் சூழலில் நிறைவேற்றப்படுபவை. ஆகவே, ஒதுக் கப்படும் நிதி ஒவ்வொரு குடிமகனையும் சென்று சேர வேண்டும்; நலத்திட்டம் ஒரு ரூபாய் என்றாலும் அது உங்களிடம் வந்து சேர வேண்டும் என்று நினைத்து திட்டங் களைத் தீட்டுபவன் நான்.

அதேசமயம், ஒன்றிய அரசின் ஓரவஞ் சனையால் தமிழ்நாட்டுக்கு வர வேண் டிய நிதி உதவிகள் படிப்படியாகக் குறைக் கப்பட்டு வருவதை நான் அதிகம் விளக்கத் தேவையில்லை.

சில நாட்களுக்கு முன்னால் சென் னைக்கு வந்து பேசிய மாண்புமிகு பிரத மர் மோடி அவர்கள், மாநில அரசுக்குத் தராமல் மக்களுக்கு நேரடியாக நிதி வழங்கி வருவதாக அப்பட்டமான ஒரு பொய்யைச் சொல்லி விட்டுச் சென்றுள் ளார்கள். எந்த மக்களுக்குக் கொடுத்தார் என்பதைச் சொல்லி இருந்தால் அந்த மக் களுக்குக் கிடைத்ததா என்று கேட்கலாம்.

### தமிழ்நாட்டுக்கு வந்து தொடர்ந்து பொய் பேசும் பிரதமர் மோடி !

இரண்டு மாபெரும் இயற்கை பேரி டரை எட்டு மாவட்டத்து மக்கள் சந்தித்தார் கள். இதற்காக 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதி கேட்டோம். அதற்கு 1 ரூபாயையாவது ஒதுக்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு உதவி செய்தாரா பிரதமர்? இப்படியா பொய்க ளைச் சொல்வது?

ஒன்றிய அரசிடம் இருந்து நிதி வர வில்லை என்றாலும் இந்த எட்டு மாவட் டத்து மக்களுக்காக, மாநிலப் பேரிடர் நிதி மற்றும் அரசுத் துறைகளில் இருந்து 3406.77 கோடி ரூபாய் அளவுக்கு நிதி வழங்கியும், நிவாரணப் பணிகளைச் செய்தும் மக்கள் நலம் காத்து வரும் அரசு தான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அரசு.

உங்கள் ஒவ்வொருவர் நலமே எனது நலம்! திராவிட மாடல் அரசின் நலம்! தாய்த்திருத் தமிழ்நாட்டின் நலம்!

அந்த நலனைக் காக்கவே நான் உழைக்கிறேன் என்பதன் மற்றுமோர் அடையாளமாகத்தான் இந்த ‘நீங்கள் நலமா’ திட்டத்தைத் தொடங்கி வைத்துள் ளேன்.

உங்கள் அரசு என்றும் உங்கள் ஒவ் வொருவருக்காகவும் தொடர்ந்து உழைத் துக் கொண்டே இருக்கும் என்று உறுதி அளிக்கின்றேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதால் மக்களிடமிருந்து மனுக்கள் வரவில்லை – மாறாக மகிழ்ச்சியைக் காண்கிறேன்!

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர் கள், “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!” என்றாரே, அதனைத்தான் இப்போது மக்களின் முகங்களில் காண்கி றேன்.

### மக்களிடம் உரையாடி உளம் மகிழ்ந்தேன்!

அந்த மகிழ்ச்சியை மேலும் உறுதி செய்ய இப்போது துவங்கப்பட்டுள்ளது தான், “நீங்கள் நலமா?” என்ற திட்டம். குறித்துக் கருத்துகளைப் பெற்று, அதனடிப் படையில் அரசின் சேவைகளை மேம்ப டுத்துவதற்கான வழிவகைகள் உருவாக் கப்படும்.

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள் குறித்து உங்களிடமிருந்து பெறப்படும் கருத்துகள் இந்த வலைத்தளத்தில் பதி வேற்றம் செய்யப்படும். கோட்டையில் உட்கார்ந்து திட்டங்கள் தீட்டி அறிவிப்ப தோடு எனது கடமை முடிந்து விட்டதாக நான் எப்போதும் நினைப்பது இல்லை.

---

#### 91-ஆம் ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு - பாவலரேறு

## பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள் 16 தொகுப்பு நூல்கள் முன் வெளியீட்டு திட்ட அறிவிப்பு!

### தொல். திருமாவளவன் எம்.பி. - பொழிலன் - தமிழ்க்கேள்வி செந்தில்வேல் - வாலாசா வல்லவன் கருத்துரை!

*சென்னை, மார்ச் 7-*

தமிழறிஞர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்க ளின் 91-ஆம் ஆண்டு பிறந்த நாள் நிகழ்வில், பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எழுத்தடைவுகள் 16 தொகுப்பு நூல்கள் சென்னை பாவலரேறு தமிழ்க் களத்தில் 9.3.2024 அன்று முன்வெளியீட்டுத் திட்ட கருத்துரை நிகழ்ச்சி நடைபெறுகிறது.



இந்நிகழ்வு முனைவர் மா.பூங்குன்றன் தலைமை யில் தமிழ்த்திரு மா. பிறைநுதல் வரவேற்புரை யில், இறை. பொற்கொடி, முனைவர் கி.குணத்தொகை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

எழுத்தடைவுகள் குறித்து பெருஞ்சித்திரனா ரின் புதல்வர் தோழர் பொழிலன் (தமிழக மக்கள் முன்னணி) விளக்கவுரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலை வர் தொல். திருமாவளவன் எம்.பி., சொல்லாய்வு அறி ஞர் அருளியார், ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலா ளர் மல்லை சத்யா, தமிழ்க் கேள்வி ஊடகம் செந்தில் வேல், தமிழ்மண் தன்னு ரிமை இயக்கப் பேராசிரியர் த.செயராமன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடை மைக் கட்சி - வாலாசா வல் லவன் ஆகியோர் கருத்துரை ஆற்றுகின்றனர்.

மேலும் இந்நிகழ்வில் தமிழறிஞர்கள் பலர் பங் கேற்கின்றனர்.

வரும் சூன் மாதம் பாவ லரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 29-ஆம் ஆண்டு நிறைவு நினைவேந்தல் நாளில் நடக்க இருக்கும் நூல்கள் வெளியீட்டுக்குரிய முன் வெளியீட்டுத் திட்ட அறிவிப்பு குறித்த இக்கருத் துரை நிகழ்ச்சியை பாவல ரேறு தமிழ்க்களம் ஒருங்கி ணைத்திருக்கிறது.

நிகழ்வின் நிறைவில் தமிழ்த்திரு அரசி நன்றி கூறு கிறார்.

---

#### மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் தலைமை!

## வேதாரண்யத்தில் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்! நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம்!

### எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

*நாகை, மார்ச் 7-*

நாகை மாவட்டம் வேதாரண்ம் நகர தி.மு.க. சார்பில் கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, தமிழ் நாடு அரசு நிதி நிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டம் வேதாரண்யம் ராஜாஜி பூங்காவில் நடை பெற்றது. பொதுக்கூட்டத் திற்கு நாகை மாவட்டக் கழ கச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என். கௌதமன் தலைமை தாங் கினார். வேதாரண்யம் நக ரக் கழகச் செயலாளரும், நகர்மன்றத் தலைவருமான மா.மீ.புகழேந்தி வரவேற் றார். ஒன்றியக் கழகச் செய லாளர்கள் என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், மகா.குமார், தலைஞாயிறு பேரூர் கழகச் செயலாளர் சி.சுப்பிரமணியன் ஆகி யோர் முன்னிலை வகித்த னர். கூட்டத்தில் கழக மருத்துவர் அணி செய லாளர் எழிலன் நாகநாதன் சிறப்புரையாற்றினார். கூட் டத்தில் கழக விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், மாவட்டக் கழகச் செயலா ளர் கற்பகம், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர் கள் சத்தியமூர்த்தி, எஸ். வி.டி.அருள், அ.பாரிபா லன், தகவல் தொழில் நுட்ப அணி எஸ்.செல்வா, பரமேஷ்வரி, சார்பு அணிக ளின் துணை அமைப்பாளர் எம்.ஆர்.சுப்பரமணியன், மீனவர் அணி ராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலக்குழு வீர முத்து, பொறியாளர் அணி சுதாகர், சுற்றுச்சூழல் அணி திருக்குமரன், எம்.எஸ்.அன் புவேலன், சின்னக்குமார், டி.எஸ்.அசோக், தாமோத ரன், செந்தாமரை, ராஜேந் திரன் ஊராட்சி மன்ற தலை வர்கள் தமிழ்மணி, சுப்பிர மணியன், சுப்பராமன் நகர அவைத்தலைவர் கணேசன், துணைச் செயலாளர்கள் ராஜாஜி, ரஜிபுதீன், பொரு ளாளர் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள் ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



02.03.2024 அன்று கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடக்குத்து தனியார் திருமண மண்டபத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண் தம்புராஜ், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

---

#### நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம்

## 143 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

### பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்!

*நெல்லை, மார்ச் 7 -*

நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் விஜ யாபதி கிராமத்தில் நடை பெற்ற மாவட்ட ஆட்சிய ரின் மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 143 பயனா ளிகளுக்கு ரூபாய் 75.27 லட் சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை சட்டப்பே ரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் விஜ யாபதி கிராமத்தில் மாவட்ட ஆட்சியரின் மக் கள் தொடர்பு திட்ட முகா மில் 143 பயனாளிகளுக்கு ரூபாய் 75.27 லட்சம் மதிப் பிலான நலத்திட்ட உதவி கள் வழங்கும் நிகழ்வு மாவட்ட ஆட்சியர் கார்த்தி கேயன் தலைமையில் சேரன் மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற் றது.

இந்நிகழ்வில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப் பாவு பங்கேற்று 143 பய னாளி களுக்கு ரூபாய் 75.27 லட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கி தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு ஏழை, எளிய மக்களுக் காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. கூட்டு குடிநீர் திட்டப்பணிகளுக்கு ரூபாய் 605.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்பணிகளில் முடிவடைந்தால் கிராமத்தில் உள்ள ஒவ் வொரு வீடுகளுக்கும் தாமி ரபரணி தண்ணீர் கிடைக் கும். இந்த அற்புதமான திட்டத்தை தந்த முதலமைச் சர் அவர்களுக்கு உங்களின் சார்பாக நன்றியை தெரிவித் துக் கொள்கிறேன்.

மகளிர்களுக்கு நகர பேருந்துகளில் கட்டண மில்லா பேருந்து பயணத் திட்டம், இந்தியாவிற்கே முன்னோடி திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் மாதந்தோ றும் தகுதியான மகளிர்க ளுக்கு ரூபாய் 1000 மகளிர் உரிமைத்தொகை, அரசு பள் ளிகளில் பயின்று கல்லூரி யில் கல்வி பயிலும் மாணவி களுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் மாதம் ரூபாய் 1000 உதவித் தொகை, மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன் ரத்து, மக்களைத் தேடி மருத் துவம் திட்டத்தின் மூலம் அவர்களது வீடுகளுக்கே சென்று மருத்துவ வசதி அளித்தல், விபத்து ஏற்பட்ட வர்களுக்கு இன்னுயிர் காப்போம் 48 மணி நேரத் திட்டத்தின் மூலம் சிகிச்சை அளித்தல், உயிர்காக்கும் உன்னத பெட்டகம் மூலம் மருத்துவ சிகிச்சை அளித் தல், விவசாயிகளுக்கு இல வச மின்சாரம் வழங்கி அவர் களது வாழ்வில் ஒளி ஏற்றுதல் போன்ற பல எண் ணற்ற திட்டங்கள் செயல் படுத்தி முதலமைச்சர் தலை மையிலான தமிழ்நாடு அரசு சாமானிய மக்களின் அர சாக திகழ்கிறது.

மேலும் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் பல் வேறு அரசு திட்டங்களை அனைத்து மக்களுக்கும் சென்றடையும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வரு கிறது. குறிப்பாக மழை வெள்ள காலங்களில் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து மாவட்ட நிர்வாகம் சிறப்பாக செயல் பட்டதன் காரணமாக மழை வெள்ள காலங்களில் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மாவட்டத்தை மீட் டெடுத்தது அவர்களின் பணி மிகவும் சிறப்பான தா கும். எனவே நாம் அனைவ ரும் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரி வித்தார்.

நிகழ்வில் மகளிர் திட்டம் திட்ட அலுவலர் இலக்கும ணன், இணை இயக்குனர் முருகானந்தம் (வேளாண்மை) தனித் துணை ஆட்சியர் ஜெயா, பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சிவகாமசுந்தரி, மாவட்ட சமூக நல அலுவ லர் தனலட்சுமி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவ லர் பென்னட் ஆசீர், ஊராட்சி மன்ற துணை தலைவர் ஸ்டெல்லா மேரி, ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி உள்பட அரசு அலு வலர்கள், கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் நடைபெற்ற திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், நகர செயலாளர் கண்ணன் ஆகியோர் உள்ளனர்.

## மக்களைப் பிளவுபடுத்திக் குளிர்காயும் கூட்டத்திடமிருந்து

# இந்தியாவை மீட்க - பெரியார் மண்ணிலே உறுதியேற்போம்!

## ஈரோடு பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

ஈரோடு,மார்ச்.7-

**முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா, நிதிநிலை அறிக்கை விளக்கம், தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கப் பொதுக்கூட்டம் ஈரோடு நகரில் மார்ச் 4 ஆம் தேதி நடைபெற்றது. இதில் கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்று கையில், 'இந்தியாவை மீட்க பெரியார் மண்ணிலே உறுதியேற்போம்' என சூளுரைத்தார்.**

இக்கூட்டத்தில் அவர் ஆற்றிய உரை வருமாறு:

"மார்ச் 2 ஆம் தேதி தஞ்சையிலே இதேபோன்ற பொதுக்கூட்டத்துக்கு சென்றிருந்தேன். அங்கே, 'என் தந்தை வீட்டுக்கு வந்தது போன்ற உணர்வு இருந்தது' என்று கூறினேன். தஞ்சாவூர் எனது தந்தை வீடு. இந்த ஈரோடோ தமிழ்நாட்டுக்கெல்லாம் தந்தை வீடு. தந்தை பெரியாரின் மண்ணுக்கு வந்திருப்பதில் மிக்க மகிழ்ச்சி.

**சிம்ம சொப்பனமாக திகழும் தந்தை பெரியார்!**

தந்தை பெரியாரின் பெயரை சொன்னாலே சிலருக்கு சிம்ம சொப்பனமாக இருக்கிறது. ஏனென்றால் இன்று யாரெல்லாம் அரசியலை மதத்தோடு கொண்டு வந்து இணைத்து, அதன் மூலம் மக்களை ஏமாற்றி குளிர் காயலாம் என்று நினைக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் . இன்றுவரை சிம்மசொப்பனமாக இருப்பது தந்தை பெரியார்தான்.

அதனால்தான் பெரியார் சிலைகளை பார்த்தாலே காவியடிப்பது அவமதிப்பது போன்றவற்றை செய்கிறார்கள். இதெல்லாம் எதை தெளிவாக சொல்கிறது என்றால், நாங்கள் எப்படி பெரியாரை மறக்கவில்லையோ, அதேபோல நீங்களும் பெரியாரை மறக்கவில்லை.

அவருடைய கருத்தியல் என்பது உங்களை அச்சுறுத்தக் கூடிய பயமுறுத்தக் கூடிய ஒன்றாகத்தான் இன்றுவரை இருக்கிறது. இத்தனை ஆண்டுகள் ஆன பின்னாலும் உங்களை ஓட ஓட விரட்டுவது பெரியாரின் கருத்து.

அந்த பெரியாரின் கருத்துகளை மையமாக வைத்து திராவிட மாடல் ஆட்சியை உருவாக்கியவர் தலைவர் கலைஞர். எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். இந்த சமூகத்தில் யாரெல்லாம் ஒதுக்கப்பட்டார்களோ ஒடுக்கப்பட்டார்களோ அவர்களுக்கெல்லாம் தலை நிமிர்ந்து வாழக் கூடிய சமமான வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று வாழ்நாளெல்லாம் பாடுபட்டவர் தலைவர் கலைஞர்.

**வாக்குறுதிகளை நிறைவேற்றியவர் கலைஞர்!**

தலைவர் கலைஞர் ஆட்சியிலேதான் பெண்களுக்கு சொத்திலே சமபங்கு உண்டு என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. அதுவரைக்கும் பெண்கள் சொத்தில் பங்கு கேட்டால், 'அதான் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாச்சுல்ல, போயிட்டே இரு' என்பார்கள். ஆனால் கலைஞர் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு சட்டம் கொண்டுவந்த பிறகு சொத்தில் பங்கு கேட்டால் கொடுத்துதான் ஆக வேண்டும். பெண் பிள்ளைக்கு உரிமை இல்லை என்று சொல்லும் சகோதரன் இருக்க முடியாது.

அதேபோல பெண்களின் படிப்பில் மிக முக்கிய மாற்றங்களை செய்தது தலைவர் கலைஞர். பெண் பிள்ளைகளின் படிப்பை பாதியில் நிறுத்தி விடுகிறார்கள் என்பதால், 'கல்யாணச் செலவுக்குதானே படிப்பை நிறுத்துகிறாய்? பெண்ணை பத்தாம் வகுப்பு வரை படிக்க வைத்தால் நானே கல்யாண செலவை ஏற்கிறேன்' என்று அறிவித்தார் கலைஞர். அந்த பெண் பத்தாவது வரை படித்துவிட்டால், எப்படியாவது மேற்கொண்டு பிளஸ்டூ படித்து கல்லூரிக்கு சென்றுவிடுவார் என்று கலைஞர் நம்பினார்.

அதேபோல பெண்களுக்கு கேஸ் ஸ்டவ் தருவேன் என்று தேர்தல் வாக்குறுதியளித்தார் கலைஞர். வாக்குறுதியளிக்கும்போது எத்தனை பர்னர் கொண்ட ஸ்டவ் என்று சொல்லவில்லை. வெற்றி பெற்று ஆட்சி அமைத்த பிறகு… அதிகாரிகள், 'நீங்க ரெண்டு பர்னர் கொண்ட ஸ்டவ் கொடுக்க ஆசைப்படுறீங்க. ஆனால் ஒரு பர்னர் கொண்ட ஸ்டவ் கொடுத்தா செலவு பாதியாக குறையும்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதற்கு கலைஞர், 'நான் செலவை மிச்சம் பண்றத்துக்காக ஆட்சியில இல்லை. அந்த பெண்கள் அடுப்படியிலயே தங்கள் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு பர்னர் கொண்ட ஸ்டவ் கொடுத்தால் ஒன்றில் சாதம், இன்னொன்றில் குழம்பு வைத்து விட்டு சீக்கிரம் சமையலை முடித்துவிட்டு வெளியே வந்து உலகம் என்னவென்று தெரிந்துகொள்வார்கள்' என்று பெண்களுக்காக அன்றே சிந்தித்தவர் தலைவர் கலைஞர்.

**கல்லூரி மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய்!**

இன்று தலைவர் கலைஞர் ஆட்சியின் நீட்சியாக அன்று பத்தாம் வகுப்பு வரை படிப்பதற்கு உதவிய கலைஞரின் தொடர்ச்சியாக, அந்த பெண்கள் கல்லூரிக்கு சென்று படிக்கும்போது மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறார் அண்ணன் முதலமைச்சர் தளபதி. கல்லூரிக்கு போக கூடிய பெண்ணுக்கு பேப்பர், பேனா, உள்ளிட்ட செலவுக்கு காசு கேட்டால், 'இதுக்குதான் உன்னை காலேஜுக்கு அனுப்பமாட்டேன்'னு சொன்னேன் என்பார்கள். அந்த மனவலி கூட மாணவிக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக அரசுப் பள்ளிகளில் படித்து கல்லூரிகளுக்கு செல்லும் மாணவிகளுக்கு ஓர் அண்ணனாக தந்தையாக புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் தந்திருக்கிறார்.

கலைஞர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் விவசாயக் கடன்களை ரத்து செய்தார். நமது தளபதி ஆட்சிக்கு வந்தவுடன் பெண்களுக்கு கட்டணமில்லாமல் பேருந்து பயணத்தைத் தந்தார். அதன் பெயர் ஏன் விடியல் பயணம் என்றால்… இருட்டுச் சிறைக்குள் இருந்து பெண்களுக்கு விடுதலை அளித்து விடியல் வெளிச்சத்தைக் காட்டுகிற பயணமாக இருக்கிறது என்பதால்தான். இன்று பெண்கள் வீட்டை விட்டு வெளியே போக, அம்மா வீட்டுக்குப் போக, நண்பர்களைப் பார்க்க, ஒரு வகுப்புக்குப் போக யாரிடமும் பஸ்ஸுக்கு காசு கேட்டு நிற்க வேண்டியதில்லை. இப்போது ஆண்கள் தான் பெண்களிடம் கேட்டு நிற்கிறார்கள்.

**ஒரு கோடியே 13 லட்சம் பேருக்கு கலைஞர் உரிமைத் தொகை!**

இதேபோல வீட்டில் இருக்கும் பெண்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டால், 'சும்மாதான் இருக்கிறார்கள்' என்று சாதாரணமாக சொல்லுவார்கள். அதிகாலையில் எழுந்து, காபி, டிபன், மதிய சாப்பாடு, துணி துவைத்து காயப் போட்டு மடித்து வைக்க வேண்டும், பாத்திரம் தேய்த்து, பிள்ளைகளை பார்க்க வேண்டும், இரவு சமையல், சமையலறையை சுத்தம் செய்து பின் அனைவரும் தூங்கிய பிறகுதான் படுக்க வேண்டும்.

இந்த வேலையில் ஞாயிறு விடுமுறையெல்லாம் கிடையாது. தீபாவளி, பொங்கல் என்றால் டபுள் வேலை. இப்படி உழைத்துக் கொண்டிருக்கும் சகோதரிகளுக்கு ஒரு மரியாதையாக அங்கீகாரமாக மாதம் ஆயிரம் ரூபாய் தருகிறார் முதலமைச்சர் தளபதி. கலைஞர் உரிமைத் தொகையாக அதை அளிக்கிறார். ஒரு கோடியே 13 லட்சம் பேருக்கு அளித்து வருகிறார்.

( பேசிக் கொண்டிருக்கும்போது அருகே இறைவணக்க ஒலி கேட்டதும் பேச்சை சில நிமிடம் நிறுத்துகிறார்)

அருகே இறைவணக்கம் செய்கிறார்கள். அதற்காக பேச்சை நிறுத்துகிறோம். பின் தொடங்குகிறோம். இதற்காக கூட்டத்தில் கைதட்டுகிறீர்கள். இதுதான் இந்தியா. இப்படித்தான் மத நல்லிணக்கம் கொண்ட, மதச்சார்பற்ற இந்தியா இருக்கிறது. ஆனால் ஒன்றியத்தில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சியில் மதத்தைப் பயன்படுத்தி மக்களை பிரித்தாளும் சூழ்ச்சியை செய்துகொண்டிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் வெறுப்பு, காழ்ப்புணர்வை பரவச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

**பிரித்தாளும் சூழ்ச்சியை செய்யும் ஒன்றிய அரசு!**

அவர்கள் அரசியலுக்காக மணிப்பூரில் பற்ற வைத்த நெருப்பு இன்று வரை அணையவில்லை. நாங்கள் மணிப்பூர் சென்று அந்த மக்களை சந்தித்தபோது யாரும் வீட்டில் இருக்க முடியாத நிலைமை. இரண்டு இனத்தவரும் பாதுகாப்பாக இல்லாததை உணரக் கூடிய நிலை. ஆயிரம் பேர் முன்னால் இரு பெண்கள் அவமானப்படுத்தப்பட்டு கூனிக்குறுகி நிற்கிறார்கள். அந்த பெண் போல ஏராளமான பெண்கள் அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பிரதமர் மோடி இன்றுவரை மணிப்பூர் பக்கம் செல்லவில்லை. அவர்களை சந்தித்து ஆறுதல் சொல்லை, அங்கே பிரச்சினையை பேசித் தீர்க்கவோ நேரமில்லை.

ஆனால் பிரதமருக்கு இப்போதெல்லாம் தமிழ்நாட்டுக்கு வருவதற்குதான் நேரம் இருக்கிறது. நேற்று வந்தார், முந்தா நாள் வந்தார், போன வாரம் வந்தார், நாளை வருவார் என்கிறார்கள். தேர்தல் வரும் வரை தமிழ்நாட்டுக்கு வந்துகொண்டே இருப்பார்.



ஆனால் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். மோடி தமிழ்நாட்டிலேயே வந்து குடியேறினால் கூட அவருக்கு தமிழர்கள் வாக்களிக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர் யார் என்று தமிழ்நாட்டு மக்களுக்கு தெரியும்.

**சாமானிய மக்களுக்காக பா.ஜ.க. செய்தது என்ன?**

நம்மைப் பார்த்து இந்து விரோதி என்கிறார்கள்., மத நம்பிக்கை என்பது தனிப்பட்ட நம்பிக்கை, தனிப்பட்ட விஷயம். அதில் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அரசாங்கம் பொதுவாக மக்களை பாதுகாக்க வேண்டும்.

இந்தியாவிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி பெரும்பான்மை மக்கள் இந்துக்கள். யாரும் அதை மறுக்க முடியாது. அவர்கள் இந்த பெரும்பான்மை மக்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள்? ஒன்றும் இல்லை. இந்து மக்களில் பெரும்பான்மையாக இருப்பது ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதாரண சாமானிய மக்கள். இவர்களின் இட ஒதுக்கீட்டுக்காக பா.ஜ.க. என்ன செய்திருக்கிறது?

நம் வீட்டுப் பிள்ளைகளும் மருத்துவம் படித்து டாக்டர் ஆக வேண்டும் என்று தலைவர் கலைஞர் மாவட்டம் தோறும் அரசு மருத்துவக் கல்லூரிகளை உருவாக்கினார். அந்த அரசு மருத்துவக் கல்லூரிகளில் நம் வீட்டுப் பிள்ளைகள் படித்துவிடக் கூடாது என்பதற்காக நீட் தேர்வை கொண்டு வந்திருக்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையில் பி.ஏ. , பி.காம்,என்று எதைப் படிக்க வேண்டுமென்றாலும் நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். சாதாரண மக்கள் கல்லூரிகளுக்கு சென்று படிக்க முடியாது. அவர்களைப் பொறுத்தவரை இந்துக்கள் என்றால் மேல் சாதி என்று சொல்லப்படக் கூடிய சிலரை மட்டுமே கருதுகிறார்கள். ஆனால் பெரும்பான்மை மக்களுக்கு என்ன செய்தார்கள்?

இன்று விவசாயிகள் போராடுகிறார்களே அவர்கள் இந்துக்கள் இல்லையா? தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்துக்கள் இல்லையா?

பெண்களுக்கு இட ஒதுக்கீடு மசோதாவை கொண்டுவந்துவிட்டோம் என்றார்கள். ஆனால் அந்த மசோதா எப்போது நடைமுறைக்கும் வரும் என்று யாருக்கும் தெரியாது. இன்று உள்ளாட்சி அமைப்புகளில் ஐம்பது சதவிகிதம் கொண்டுவந்திருக்கிறோம்.,

**பெண்களை ஏமாற்றி விடலாம் என கருதும் பா.ஜ.க. அரசு!**

ஆனால் அவர்கள் எப்படி தெரியுமா இட ஒதுக்கீடு அளிக்கிறார்கள்? முதலில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துவார்களாம்… அதன் பின் தொகுதி மறு வரையறை செய்வார்களாம்… அதன் பின்னர்தான் மகளிருக்கு இட ஒதுக்கீடு வரும். மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது சாதாரண விஷயமா? அதன் பின் தொகுதி மறு வரையறை கொண்டு வரும்போது மாநிலங்கள் எதிர்க்கும், வழக்குத் தொடுக்கும். இதற்கெல்லாம் பிறகுதான் மகளிர் இட ஒதுக்கீடு வரும். அதனால் முடியவே முடியாது என்று தெரிந்த ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து விட்டு மகளிர்க்கு இட ஒதுக்கீடு அளித்து விட்டோம் என்று பெண்களை ஏமாற்றி விடலாம் என்று கருதுகிறது பா.ஜ.க..

**தேர்தல் முடிந்ததும் அ.தி.மு.க. பா.ஜ.க. இரண்டும் ஒட்டிக் கொள்ளும்!**

2014 இல் மோடி இந்தப் பக்கம் வந்த போது சொன்னார். இங்கே இருக்கக் கூடிய ஜவுளித் தொழிலை தரமுயர்த்துவதற்கான மிகப்பெரிய பூங்காவை அமைத்துத் தருவேன் என்று சொன்னார். 2024 வந்துவிட்டது. பூங்காவும் வரவில்லை. எதுவும் வராது.

நம்மைப் பார்த்து ஸ்டிக்கர் ஒட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். பிரதமரின் வீடு கட்டும் திட்டத்துக்கு பிரதமர் கால் வாசி பணம் கொடுக்கிறார், முக்கால் வாசி பணத்தை நம்முடைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான் கொடுக்கிறார். ஆனால் இதில் ஸ்டிக்கர் ஒட்டு வது யார்? ஏற்கனவே எல்லாவற்றுக்கும் ஸ்டிக்கர் ஒட்டிய அ.தி.மு.க., இப்போது ஸ்டிக்கர் ஒட்டும் பா.ஜ.க.... இந்த இரண்டும் தேர்தலுக்காக பிரிந்து நிற்கிறது. தேர்தல் முடிந்ததும் மீண்டும் ஒட்டிக் கொள்ளும். அதனால் இவர்களை நம்பாதீர்கள்.

இந்த ஈரோட்டில் பெருந்துறையில் 100 பெட் கொண்ட உயர் மருத்துவமனை தரமுயர்த்தப்படும் என்று அறிவித்து 40 கோடி ரூபாய் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜவுளிப் பூங்காவை அவர்கள் தரமாட்டார்கள் என்று அறிந்து… 10 ஜவுளிப் பூங்காக்களுக்காக 20 கோடி ஒதுக்கியிருக்கிறார் நமது முதலமைச்சர்.

பழமையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக கொடுமுடியில் உள்ள மிகப் பழைய பயணியர் விடுதியை செப்பனிட்டு, வரக் கூடிய மக்களை ஈர்க்கக்கூடிய அளவுக்கு மாற்ற 50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி மக்களுக்கான அரசாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது திராவிட மாடல் அரசு.

**நிதிநிலை அறிக்கையிலே பல திட்டங்கள் அறிவிப்பு!**

பெண்களுக்கு மட்டுமல்ல, இந்த நிதிநிலை அறிக்கையிலே இளைஞர்கள் கல்லூரிக்கு சென்று படிக்கும்போது தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மதியம் வரை பசியோடு இருக்கக் கூடாது என்று காலை உணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பாடுபட்டு வருகிறோம்.

ஆனால் அங்கே இருக்கும் ஒன்றிய அரசு என்ன செய்திருக்கிறது? ஆயிரம் ரூபாய், ஐநூறு ரூபாய் செல்லாது என்றார்கள். இத்தோடு கருப்புப் பணம் ஒழிந்துவிடும், நாடு இனி வேறு மாதிரி ஆகிவிடும் என்பார்கள். வங்கி வாசலில் காத்திருந்து நாடு முழுதும் நூற்றுக்கணக்கானவர்கள் இறந்துபோனார்கள். அந்த உயிர்த் தியாகம் எதற்காக? இன்றுவரை அதை நியாயப்படுத்த முடியவில்லை. ஆயிரம், ஐநூறுக்கு பதில் இரண்டாயிரம் ரூபாயைக் கொண்டுவந்தார்கள். இப்போது இரண்டாயிரம் ரூபாயும் செல்லாது என்று சொல்லிவிட்டார்கள். இதன் பெயர்தான் துக்ளக் தர்பார்.

பணமதிப்பிழப்பு வந்த பின் சிறு குறு தொழில்கள் ஏராளமானவை முடங்கியது. அவர்களை கைதூக்கிவிட எதுவும் செய்யாமல் ஜிஎஸ்டி கொண்டுவந்து தெரிந்த பாக்கி., தெரியாத பாக்கி என திணித்து… இன்று சிறு குறு தொழில்களை எல்லாம் மூட வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நாட்டின் முதுகெலும்பான சிறு குறு தொழில்களை முடக்கி, அதிலே வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்களை எல்லாம் வேலை இழக்கச் செய்திருப்பதுதான் மோடியின் ஆட்சி.

ஆனால் நாட்டின் தனி நபர் வருமானம் அதிகரித்திருக்கிறது என்கிறார்கள். அதானி, அம்பானியின் வருமானம்தான் பா.ஜ.க. ஆட்சியில் அதிகரித்திருக்கிறது.

இந்த ஊரில் இருக்கும் ஒருவர், பா.ஜ.க.வுக்கு ஊழலே தெரியாது,. திராவிடக் கட்சிகள்தான் ஊழல் கட்சிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். உலகத்திலேயே மிகப்பெரிய ஊழல் எலக்டரல் பாண்ட் தான். அதை சட்டமாக்கி யார் எந்த கட்சிக்கு எவ்வளவு நிதி கொடுக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது. இந்தியாவில் உள்ள எல்லா கட்சிகளுக்கும் வந்த நிதியைவிட மூன்று மடங்கு அதிகமாக நிதி வசூலித்துள்ளது பா.ஜ.க.. உச்ச நீதிமன்றம் இந்த எலக்ட்ரல் பாண்டுகளை செல்லாது என்று தீர்ப்பளித்து. யார் யார் எவ்வளவு நிதி கொடுத்தார்கள் என்ற விவரங்களை வெளியிட வேண்டும் என்று உத்தரவிட்டது. ஆனால் இப்போது அந்த விவரங்களை வெளியிட அவகாசம் அளிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்திடம் அபிடவிட் போட்டிருக்கிறார்கள். மடியிலே கனம் இருப்பதால்தானே இந்த பயம். இதற்கு பெயர் ஊழல் இல்லையா? ஊழலை சட்டமாக்கினால் அது ஊழல் இல்லையா?

இவர்கள் எந்த மக்களைப் பற்றியும் அக்கறை இல்லாதவர்கள். விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கும்போது ஓர் அமைச்சரின் மகன் வண்டியை விட்டு கொலை செய்கிறார். பத்திரிகையாளர்களை, எதிர்க்கருத்து உடையவர்களை எல்லாம் கைது செய்து நாட்டையே சர்வாதிகாரமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு சுதந்திரப் போராட்டம் என்று தளபதி சொன்னதுபோல மறுபடியும் நாட்டின் மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க, ஒருவரை ஒருவர் நேசித்து வாழ, அடுத்த தலைமுறையினர் அனைத்து வாய்ப்புகளையும் பெறுவதற்கு… இந்த நாட்டை மீட்டெடுக்க வேண்டிய கடமை நாம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

நம் பிள்ளைகளுக்கு நாம் தரப் போகிற பரிசு பாதுகாப்புதான். அந்த உணர்வோடு இந்தத் தேர்தலில் வாக்களியுங்கள். மக்களை பிளவுபடுத்து பவர்களுக்கு இந்த நாட்டில் இடமில்லை என்பதை சொல்லித் தாருங்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.

இந்நிகழ்வில் ஈரோடு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான முத்துசாமி, உயர் நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் கந்தசாமி, மாநில மகளிரணி தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மாநில நெசவாளர் அணி செயலாளர் சச்சிதானந்தம் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

---

### திருவண்ணாமலை மாவட்ட அவைத் தலைவர்

# த.வேணுகோபால் படத்திறப்பு நிகழ்ச்சி!

## அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து புகழஞ்சலி! கு.பிச்சாண்டி தலைமை!

*திருவண்ணாமலை, மார்ச் 7-*

*திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட திமுக அவைத் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த த.வேணுகோபால் அவர்களின் படத்திறப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.*

*நிகழ்வில் கலந்து கொண்டு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு படத்தை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்துகிறார்.*

*இன்று (07.03.2024 - வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு திருவண்ணாமலை ஒன்றியம், காட்டாம்பூண்டி ஊராட்சியில் திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட தி.மு.க. அவைத் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த த.வேணுகோபால் அவர்களின் படத்திறப்பு நிகழ்வு நடைபெறவுள்ளது.*

*நிகழ்விற்கு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகிக்கிறார்.*

*வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன், கழக மருத்துவர் அணிதுணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்றஉறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி மற்றும் தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநிலபொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர்கள் பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், தொ.மு.ச., பேரவை செயலாளர் செயலாளர் க.சௌந்தர ராசன், செய்தித் தொடர்பு இணைசெயலாளர் சிவ.ஜெயராஜ், மாவட்டஊராட்சிக் குழுத் தலைவர் பார்வதி சீனுவாசன், துணைத் தலைவர் பாரதி ராமஜெயம், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*நிகழ்வில் கலந்து கொண்டு பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு படத்தை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்துகிறார்.*

*நிகழ்வில் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, மாநில விவசாய தொழிலாளர் அணிதுணை செயலாளர் வ.அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.வி.ராஜ்குமார், மாவட்ட துணை செயலாளர் ந.பாண்டுரங்கன், மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள்க.லோகநாதன், ஜெயராணிரவி,*

*தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், விஜி (எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளி கிருஷ்ணா, ஏ.டபள்யு. சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, வடக்கு மாவட்ட எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், கோ.எதிரொலி மணியன், மா.ஏழுமலை, என்.கே.ஏ.பாபு, இ.எஸ்.டி. கார்த்திகேயன், கே.ஏ.புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி.அசோக், பி.எஸ்.சாந்தகுமார், ப.மணிகண்டன், இ.பிச்சைகண்ணு, பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல் பாஷா, ப.க.மணி வண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், க.சீனுவாசன், மாலினி வினோத்திவாகரன், இராணிவேங்கடேசன்,*

*வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன்,*

*ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம்,பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் கே.வி.சேகரன், அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிட முருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர்.பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,*

*தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ.கண்ணன், அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசி ராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத் பாஷா,*

*தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள்சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே. கோவர்தணன், வேணி ஏழுமலை*

*நகரமன்றத் தலைவர்கள் நிர்மலா வேல்மாறன், ஆ.மோகன வேல், எச்.ஜலால், ஒன்றியக்குழுத் தலைவர்கள் கலைவாணி கலைமணி, பரிமளாகலைரசன், பூ.அய்யாகண்ணு, தயந்திஏழுமலை, சாந்தி பெருமாள், ராணி அர்ச்சுனன், கனிமொழிசுந்தர், பச்சையம்மாள் சீனுவாசன், திலகவதி ராஜ்குமார், இந்திரா இளங்கோவன், காமாட்சி இளங்கோவன், என்.பி.பாபு, த.ராஜீ, பேரூராட்சித் தலைவர்கள் கோ.சரவணன், கௌரி நடராஜ், செல்வபாரதி மனோகுமார்,*

*வடக்கு மாவட்ட ராணி சண்முகம், கே.டி.ஆர்.பழனி, சுதாமுருகன், மகாலட்சுமி கோவர்த்தனன், ராதா ஜெகவீரப்பாண்டியன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்துகொள்கின்றனர்.*




கடலூர் கிழக்கு மாவட்டம், வடலூர் நகர கழகம் சார்பில், "எல்லோருக்கும் எல்லாம்" மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம், வடலூரில் நடைபெற்றது. வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செலயலாருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைக் கழகப் பேச்சாளர் கவிஞர் சல்மா, தலைமை கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் வி.சிவக்குமார் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒரு இலட்சம் ஏழை, எளிய பொதுமக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தை மயிலாடுதுறையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக 04.03.2024 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி , திண்டுக்கல் மாவட்டம், எரியோட்டில் நடைபெற்ற விழாவில் 1068 இலவச வீட்டுமனைப் பட்டாக்களை பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி செ.ஜோதிமணி, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.அ.பிரதீப், மாவட்ட வருவாய் அலுவலர் சே.ஹா.சேக் முகையுதீன், பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் திருமதி சௌடீஸ்வரி கோவிந்தன், சீனிவாசன், ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் ஜி.தேவசகாயம், எரியோடு பேரூராட்சித் தலைவர் திருமதி கா.முத்துலட்சுமி, துணைத்தலைவர் பெ.ஜீவா உட்பட பலர் உள்ளனர்.

### திருநெல்வேலி மாவட்டம் பணகுடி புறவழிச்சாலையில் ஏற்பட்ட

# சாலை விபத்தில் காயமடைந்த தூய்மைப் பணியாளரின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச் 7 -

திருநெல்வேலி மாவட்டம் பணகுடி புறவழிச்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்த தூய்மைப் பணியாளரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பணகுடி பகுதி 2 கிராமம், பணகுடி தூய்மைப் பணியாளர் குடியிருப்பில் வசித்து வரும் திருமதி. வசந்தி (வயது 38) க/பெ. முத்துக்குட்டி என்பவர் ஈஸ்ட் விசன் சேரிடபிள் டிரஸ்ட் நிறுவனம் மூலம் பணகுடி பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்துவருபவர் கடந்த 29.02.2024 அன்று பிற்பகல் பணகுடி புறவழிச் சாலையில் தூய்மைப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக நான்கு சக்கர வாகனம் மோதிய விபத்தில், இரண்டு கால்கள் மற்றும் முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டு சிகிச்கைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு நடக்க முடியாத நிலையில் உள்ளார் என்ற செய்தியை கேட்டு மிகவும் வருத்தமும், வேதனையும் அடைந்தேன். இவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி.வசந்தி அவர்களின் குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் எத்தனை முறை சுற்றி வந்தாலும் நோட்டாவை கூட வெல்ல முடியாது என்பதால்

# பிரதமர் மோடி விரக்தியில் ஆவேசமாகப் பேசுகிறார்!

## தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டன அறிக்கை!



சென்னை, மார்ச் 7 -

தமிழ்நாட்டில் எத்தனை முறை சுற்றி சுற்றி வந்தாலும் நோட்டாவை பா.ஜ.கவால் வெற்றி கொள்ள முடியாது என்பதால் பிரதமர் மோடி விரக்தியடைந்துள்ளார். அதன் வெளிப்பாடு தான் அவரது ஆவேச பேச்சுஎன விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு"

தமிழ்நாட்டில் எத்தனை முறை சுற்றி சுற்றி வந்தாலும், எத்தனை வியூகங்கள் வகுத்தாலும், எத்தனை தில்லாலங்கடி வேலைகளைக் கையாண்டாலும் தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சியால் நோட்டாவை வெற்றி கொள்ள முடியாது என்பதை புரிந்து கொண்ட பிரதமர் மோடி, விரக்தியின் உச்சிக்கு சென்றுள்ளார். அதன் வெளிப்பாடு தான் சென்னையில் நடைபெற்ற கூட்டத்திலும் அதற்கு முன்பு பெருந்துறையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் திராவிட முன்னேற்ற கழகத்தையும் தமிழ்நாட்டு அரசையும் நான்காம் தர நடைமுறையில் பிரதமர் மோடி விமர்சித்துள்ளார். இரண்டு கூட்டங்களிலும் அவர் வைத்த விமர்சனம், ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு திமுக அரசு ஒத்துழைக்கவில்லை. ஒன்றிய அரசின் திட்டங் களுக்கு திமுக அரசு தனது ஸ்டிக்கரை ஒட்டுகிறது என்பது தான் பிரதானமாக இருந்தது.

முதலமைச்சர் உட்பட பல்வேறு தலைவர்கள், எந்தெந்தத் திட்டங்களுக்கு தமிழ்நாடு அரசு ஒத்துழைப்பு தரவில்லை என்ற பட்டியலை தாருங்கள் என்று கேட்ட பின்பும் அதற்கு பதிலளிக்காமல் அதே பிரச்சனையை மீண்டும் நேற்று சென்னையில் எழுப்பி உள்ளார். பிரதமரால் அதற்கான விளக்கத்தை அளிக்க முடியாது. காரணம் ஒன்றிய அரசு தமிழ் நாட்டுக்காக எந்தத் திட்டத்தையும் கொண்டு வரவில்லை. அறிவித்தத் திட்டங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்த வில்லை. அது எய்மஸ் மருத்துவக் கல்லூரியாக இருக்கலாம், சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட பணிகளாக இருக்கலாம், நீட் தேர்வில் விலக்கு அளிப்பதாக இருக்கலாம், இப்படி எண்ணற்ற பிரச்சினைகளில் ஒன்றிய அரசு தான் மாநில அரசுக்கு நிதியை ஒதுக்கவில்லை. திட்டங்கள் நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பைத் தரவில்லை.

அண்மையில் சென்னை மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கொடும் இயற்கை சீற்றங்களால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளை, மக்களை மீட்டெடுக்க குறைந்தபட்சம் 37 ஆயிரம் கோடி தேவைப்படும். அதை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று கேட்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் இன்று வரை சல்லி காசு கூட வழங்கவில்லை என்று நேற்று மயிலாடுதுறையில் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார். இப்படிப்பட்ட ஆணித்தரமான கேள்விகளுக்கு பதில் அளிக்க வக்கற்ற பாரதிய ஜனதா கட்சியினர் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என போகிற போக்கில் புழுதியை வாரி தூற்றுகிற பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள முதலமைச்சர்களை மதிப்பீடு செய்த ஒரு நிறுவனம் முதல் இடத்தில் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இருப்பதாக அறிவித்திருக்கிறது. அதற்குக் காரணம் தமிழ்நாடு அரசின் முற்போக்கு திட்டங்கள் தான். தமிழ்நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் கல்வி உயர்விற்கும் தொடர்ந்து எடுத்து வரும் நடவடிக்கைகள், அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் இன்றைக்கு இந்தியா முழுவதும் பின்பற்றக்கூடிய நிலையை அடைந்திருக்கிறது.

குறிப்பாக பெண்களை சமநிலைப்படுத்தி உயர்த்துவதற்காக இலவச பேருந்து திட்டம், மாதந்தோறும் மகளிர் உரிமைத்தொகை கானத் திட்டம், உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் உதவி தொகை, அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதம் தோறும் ஊக்கத்தொகை, பள்ளிகளில் காலை உணவு திட்டம். இப்படிப்பட்ட அரிய திட்டங்களால் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்கள் பொருளாதார ரீதியாக அடுத்த நிலைக்கு செல்லவும் கல்வி பெற்றவர்களாக தமிழ்நாட்டு இளைஞர்கள் மாறிடவும் வழிவகை பிறக்கிறது. எனவே தான் இத்திட்டங்களை எல்லாம் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் இன்றைக்கு பின்பற்றக்கூடிய நிலையை அடைந்திருக்கிறது.

இப்படிப்பட்ட ஒரு அரசின் மீதும், முதலமைச்சர் மீதும் பிரதமர் மோடி வைக்கும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை மக்கள் ஏற்க மாட்டார்கள் என்பதால் தான் இப்போது போதைப்பொருள் குறித்து சென்னை கூட்டத்தில் விமர்சித்திருக்கிறார். இந்தியாவிலேயே அதிக அளவில் போதைப் பொருள் நடமாட்டம் உள்ள மாநிலமாக குஜராத் உள்ளதாகவும், குறிப்பாக அதானி துறைமுகம் தான் இதற்கான திறவுகோலாக இருப்பதாகவும் பல்வேறு கருத்துக்கள் நிலவிவருகிற நிலையில் தமிழ்நாட்டில் போதைப் பொருள் கடத்தல் அதிகம் நிலவுகிறது என்றும் அதனை தடுப்பேன் என்றும் பேசுவது நகைப்பிற்குரியதாகும். தமிழ்நாடு அரசு கடந்த இரண்டு மாதத்தில் இப்படிப்பட்ட போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 470க்கும் மேற்பட்டவர்களை அரசு கைது செய்துள்ளது. சுட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துள்ள முதல்வரை, தமிழ்நாட்டு அரசை கொச்சைப்படுத்தி, களங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக உயர்ந்த பதவியில் உள்ள ஒரு பிரதமர், ஆதாரமற்ற வகையில் நாக்கில் நரம்பில்லாமல், நான்காம் தர பேச்சாளரைப் போன்று மேடைகளில் பேசுவது அவருடைய பொறுப்பிற்கு அழகல்ல. இது வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும்.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தேனி தனியார் மண்டபத்தில் தேனி வடக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பாக ரத்ததான முகாமை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் துவக்கி வைத்தார். உடன் சரவணகுமார் எம்எல்ஏ. மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மன்சூர் அலிகான் . வடக்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் சுகன்யா.நகர மன்ற தலைவர் ரேணு பிரியா பாலமுருகன், துணைத்தலைவர் செல்வம், நகரச் செயலாளர்கள் நாராயண பாண்டியன், முகமது இலியாஸ், வீரபாண்டி, பேரூர் செயலாளர் செல்வராஜ், வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ராஜேஷ் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து உள்ளனர்.

### கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடியில்

# 456 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!

கடலூர் , மார்ச் 7 -

02.03.2024 அன்று கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடக்குத்து தனியார் திருமண மண்டபத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன் , மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண் தம்புராஜ், முன்னிலையில்; 456 பயனாளிகளுக்கு ரூ.5,01,59,942 மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள். மகளிருக்கு இலவச பேருந்து பயணம் திட்டம், அரசு பள்ளியில் பயின்ற பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில ஏதுவாக புதுமைப் பெண் திட்டம், மக்களை தேடி மருத்துவம் திட்டம், அரசு பள்ளி மாணவர்களின் நலன் கருதி காலை உணவு வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

மக்களுடன் முதல்வர், உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் அரசு அலுவலர்கள் மக்களை நாடி சென்று அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு காணப்பட்டு வருகிறது. மேலும் அவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால் பொதுமக்கள் இதுபோன்ற திட்டங்களை நன்கு பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய்த் துறை சார்பில் 95 பயனாளிகளுக்கு ரூ.95,00,000 மதிப்பீட்டில் இலவச மனைப்பட்டாவிற்கான ஆணையும், 42 பயனாளிகளுக்கு பட்டா மாற்றத்திற்கான (உட்பிரிவு/முழுப்புலம்) ஆணையும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு ரூ.16,72,100 மதிப்பீட்டில் முதியோர் உதவித் தொகை / விதவை உதவித் தொகை / மாற்றுத் திறனாளி உதவித் தொகைக்கான ஆணையினையும், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூ.28,700 மதிப்பீட்டில் மக்களை தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் மருந்து பெட்டகம், ஊட்டச்சத்து பெட்டகம் மற்றும் கண்கண்ணாடிகளையும், மருத்துவ காப்பீட்டுத் திட்டத் தின் கீழ் 25 பயனாளிகளுக்கு மருத்துவ காப்பீட்டு அட்டைகளையும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில் சார்பில் 24 பயனாளிகளுக்கு ரூ.8,58,142 மதிப்பீட்டில் வேளாண் கருவிகள், இடுபொருட்கள் மற்றும் முந்திரி உடைக்கும் கருவிகளையும், மாவட்ட தொழில் மையம் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.63,00,000 மதிப்பீட்டில் கடன் இணைப்புக்கான ஆணையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்டத்தின் சார்பில் 27 பயனாளிகளுக்கு ரூ.1,80,58,000 மதிப்பீட்டில் கடன் இணைப்புக்கான ஆணையும், தமிழ்நாடு தொழில்துறை முதலீட்டு நிறுவனம் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.1,13,12,000 மதிப்பீட்டில் கடன் இணைப்புக்கான ஆணையும், ஊரக வளர்ச்சி துறை சார்பில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.12,31,000 மதிப்பீட்டில் கடன் இணைப்புக்கான ஆணையும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பில் 100 பயனாளிகளுக்கு ரூ.12,00,000 மதிப்பீட்டில் தனிநபர் இல்ல கழிவறைக்கான ஆணையியையும், ஜன்மன் திட்டத்தின் கீழ் 7 பயனாளிகளுக்கு பழங்குடியினர் சான்றிதழ்களையும் என மொத்தம் 456 பயனாளிகளுக்கு ரூ.5,01,59,942 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், பண்ருட்டி ஒன்றியக்குழுத் தலைவர் சபா.பாலமுருகன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.




தமிழக முதல்வர் – கழகத் தலைவர் அவர்களின் நல்லாட்சியில் ஜோலார்பேட்டை தொகுதி ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் நெக்குந்தி ஊராட்சியில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் அரசின். திட்டங்கள் மற்றும் மான்யங்கள், நலத்திட்ட உதவிகள் வழங்கும் கூட்டம், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர், கவுன்சிலர் க.உமா கன்ரங்கம் தலைமையில் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் வேளாண்மை துறை அதிகாரிகள், மாவட்ட கவுன்சிலர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கிளை செயலாளர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக வேட்பாளராகப் போட்டியிட விரும்புவோர் விண்ணப்பம் தருவதற்கான தேதி விவரம்!

## பொதுச்செயலாளர் **துரைமுருகன்** அறிவிப்பு!

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக போட்டியிட விரும்புவோருக்கான விண்ணப்பப் படிவங்கள் அண்ணா அறிவாலயத்திலுள்ள தலைமைக் கழகத்தில் கிடைக்கும்.

**போட்டியிட விரும்புகின்ற கழகத் தோழர்கள் விண்ணப்பத்தை முறையாக பூர்த்தி செய்து, 1-3-2024 முதல் 7-3-2024 மாலை 6 மணிக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**வேட்பாளர் விண்ணப்பக் கட்டணம் - ரூ.50,000/-**

(விண்ணப்பப் படிவத்தை தலைமைக் கழகத்தில் ரூ.2,000/-வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.)

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் குளச்சல் நகர தி.மு.க. சார்பில் "எல்லோருக்கும் எல்லாம்" திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் 05.03.2024, செவ்வாய்க்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு குளச்சல், அண்ணா சிலை அருகில் வைத்து குளச்சல் நகர செயலாளர் என். நாகூர்கான் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நிதிநிலை அறிக்கை மற்றும் கழக அரசின் இரண்டரை ஆண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் என்.தில்லை செல்வம், மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரத்தினம் குளச்சல் நகர்மன்ற தலைவர் அ.நசீர், குளச்சல் நகர அவைத் தலைவர் பிரான்சிஸ் அமலதாஸ், மாவட்ட மீனவர் அணி தலைவர் எஸ்.கே.ஆன்டனிராஜ், நகர்மன்ற உறுப்பினர் ஜெ.ஜாண்சன் உட்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி 'கலைஞர் நூற்றாண்டு விழா'வையொட்டி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலாத்தூர் பி.ஆர்.மஹாலில் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர். ஆ.வெங்கடேசன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மண்டல தலைவர் வாசுகி சசிகுமார், மேற்கு யூனியன் சேர்மன் வீரராகவன், மேலூர் வருவாய் கோட்டாட்சியர். ஜெயந்தி ஆகியோர் உடன் உள்ளனர்.

## வி.எல்.ஜோதி முன்னிலை! கோ.வ.தமிழ்வாணன் தலைமை!

# அரக்கோணம் நகரத்தில் முதல்வர் பிறந்த நாள் விழா!

அரக்கோணம், மார்ச் 7-

அரக்கோணம் நகரக் கழகம் சார்பில் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக்கூட்டத்தில் 4.3.2034 அன்று, இடம் :சுவல்பேட்டை பிள்ளையார் கோயில் அருகில். மாலை 6மணி அளவில் நடை பெற்றது.

கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்தி வழிகாட்டுதலின் படி. சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட மாநில சுற்றுச் சூழல் அணி துணைச் செயலாளர் ஆர்.வினோத்காந்தி மற்றும் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா தலைமை கழகச் செய்தி தொடர்புக் குழு இணைச் செயலாளர் சிறப்புரை ஆற்றினார்கள்.

அரக்கோணம் நகர் கழக செயலாளர் வி.எல்.ஜோதி முன்னிலையில் தலைமை கோ.வ.தமிழவாணன் நகர துணைச் செயலாளர் வரவேற்பு கே.கமலக்கண்ணன், 22வது வார்டு வட்ட கழகச் செயலாளர் எஸ்.மல்லிகா, 22வது வார்டு நகரமன்ற உறுப்பினர், எல்.பஞ்சா, டிவி.சதீஸ் எம்கே.செந்தில் குமார், எல்.ரமேஷ்பாபு, என்.லோகி, எ.கே.பாரி, வி.தனஞ்செழியன், வி.ஜெய்சங்கர், எஸ்.வேலு. இ.கார்த்திகேயன், எம்.வடிவேல்வண்ணன், எம்சி. உடன் மு.கன்னையன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என்.ராஜ் குமார்.

லட்சுமிபாரி, கலாவதி அன்புலாரன்ஸ். கே.பசுபதி சீனிவாசன். அரக்கோணம் நகர துணை செயலாளர்கள் எ.அன்புலாரன்ஸ் நந்தாதேவி, எஸ்.ரமேஷ் பாபு, மாவட்டப் பிரதிநிதிகள் ஆர்கே.லிங்கம், பூக்கடை ஹரி எ.தமீன்அன்சாரி வி.எஸ்.ஆர்.ரவிச் சந்திரன், வி.பால கிருஷ்ணன் மாவட்டப் அமைப்பாளர்கள் எம்.கே.சிவா,எஸ். சரவணகுமார், கே.எம்.பி. பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.பிரசாத், எஸ்.பி.மாலின், எம். கருணா கரன், டி.அன்பு, ஜி.அனந்தன். நெப்போலியன்.ஜெ.நவீன்ராஜ் நன்றி உரை. டி.அந்தோணி வெ.பாண்டியன் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் நகர மன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக பிரதி நிதிகள் நகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மகளிர் அணியினர் தகவல் தொழில்நுட்ப அணி கழகம் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## உயர் கல்வி மாணவர்களுக்கு EDII's ஹேக்கத்தான் போட்டி!

# புத்தாக்கக் கண்டுபிடிப்புகள் இணையதளம் வழியாகப் பெறப்படுகின்றன!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 7–

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் செ.உமாசங்கர், வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

உயர்கல்வி பயிலும் மாணவர்களின் புத்தாக்க கண்டுபிடிப்பிற்கான EDII's ஹேக்கத்தான்–2023–24, நிகழ்வு தொடங்கப்பட்டுள்ளது. புத்தாக்க கண்டுபிடிப்புக்கள் இணையதளம் வழியாக பெறப்படுகின்றன. https://www.edii–innovation.tn.gov.in

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தினை, (Entrepreneurship Development and Innovation Institute – EDII–TN) தமிழ்நாட்டில் புதிய தொழில்முனைவோர்களை உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசு 2001ல் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் நிறுவியது. இந்நிறுவனம் செயல்படுவதற்கான நிதிகளையும் தொடர்ந்து தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க சிந்தனைகளை பள்ளி மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் மத்தியில் உருவாக்குவதற்காக EDII–TN நிறுவனம் ஆண்டுதோறும் உயர்கல்வி மாணவர்களுக்கு இ.டி.ஐ.ஐ ஹேக்கத்தான் போட்டிகளை 2017 ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது. உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் மத்தியில், அவர்கள் படிக்கிற காலத்திலேயே புத்தாக்கம் மற்றும் தொழில் முனைதல் சிந்தனையினை தூண்டும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த ஹேக்கத்தான் போட்டிகளில் பங்கு பெறும் மாணவர்கள் புத்தாக்க முறையில் சந்தைப்படுத்தக்கூடிய புதிய பொருட்களின் மாதிரிகளை உருவாக்க வேண்டும். (The students have to generate innovative ideas & convert their ideas into marketable product prototypes). இவ்வாறு உருவாக்கப்படும் சிறந்த மாதிரிப் பொருட்களுக்கு ஆண்டுதோறும் உயர்கல்வி மாணவர்களுக்கு 25 முதல் பரிசுகள், தலா ரூபாய் 1 லட்சம் என அரசு வழங்கி வருகிறது. இதுவரையில் 136 மாணவர் அணிகளுக்கு 1.14 கோடி ரூபாய் ரொக்கப்பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், வேளாண்மைக் கல்லூரிகள், கால்நடை மருத்துவக்கல்லூரிகள், மீன் வளக் கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் (polytechnics) மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள் (ITIs), போன்ற 1,700–க்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் இந்தப் போட்டியில் பங்கு பெற்று வருகின்றன. நடப்பு ஆண்டில் 3.20 லட்சம் மாணவர்கள் இந்தப் போட்டிக்குப் பயிற்சி பெற்று பங்கு பெற்று வருகின்றனர்.

பரிசுகள், பாராட்டுச் சான்றுகள் (இது மாறுதலுக்கு உட்பட்டது இன்னும் அதிக மாணவர்களுக்கு பரிசு தருவதற்கு வாய்ப்பு இருக்கிறது )

முதல் பரிசு – முதல் 20 அணிகளுக்கு தலா ரூ.1 லட்சம்.

2வது பரிசு 60 அணிகளுக்கு தலா ரூ.25000

ஒவ்வொரு நிலையிலும் மாணவர்களுக்கு பங்கேற்பாளர்கள் சான்று, பாராட்டுச்சான்று, மாணவ வழிகாட்டிகளுக்கு சான்றுகள், வழிநடத்துனர்களுக்கு சான்றுகள், சிறந்த உயர்கல்வி நிறுவனங்களுக்கு சான்றுகள் வழங்கப்படும்.

இப்போட்டிக்கான மாணவர்கள் கண்டுபிடிப்புகள் https://www.edii–innovation.tn.gov.in/ இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

புத்தாக்க சிந்தனை களைப் பதிவு செய்வதற்கான கடைசி தேதி 20.03.2024 மாலை 5.00 மணியாகும். எனவே உயர்கல்வி பயிலும் மாணவர்கள் இதில் பங்கேற்க விரும்பினால் உங்களது கல்லூரி நிர்வாகத்தினை தொடர்பு கொண்டு தாமதமில்லாமல் மாணவ வழிநடத்துனர்கள் வழியாகப் புத்தாக்க சிந்தனைகளை (innovative ideas) பதிவு செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. 10, 12 வார்டு சார்பில் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் வீடு வீடாகச் சென்று வட்டச் செயலாளர்கள் பி.எம்.மருது, வி.சி.மாதவன் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., துண்டுப்பிரசுரங்களை வழங்கிய போது எடுத்த படம். உடன் மூவேந்திரன் மண்டல தலைவர் சரவண புவனேஸ்வரி, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## வடலூரில் "எல்லோருக்கும் எல்லாம்"

# நிதிநிலை அறிக்கை மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கவிஞர் சல்மா, ச.அ.பெருநற்கிள்ளி சிறப்புரையாற்றினர்

கடலூர், மார்ச் 7-

கடலூர் கிழக்கு மாவட்டம், வடலூர் நகர கழகம் சார்பில், "எல்லோருக்கும் எல்லாம்" திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம், வடலூர் பேருந்து நிலையம் அருகில், 04.03.2024, திங்கள் கிழமை, மாலை 6 மணியளவில், நகர செயலாளர் த.தமிழ் செல்வன் தலைமையில் நடைப்பெற்றது. நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார் வரவேற்புரையாற்றினார்.

ஆர்.சுப்புராயலு, பி.விஜயராகவன். எம்.கோவிந்தராஜ், எஸ்.ஷாகுல் ஹமீது. எஸ்.பழனி, ஆர்.பத்மாவதி ராஜபூபதி, எம்.ஆர்.சந்துரு, எஸ்.ராமசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செலயலாருமான எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தலைமை கழக பேச்சாளர் கவிஞர் சல்மா, தலைமை கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் வி.சிவக்குமார், ஆர்.நாராயணசாமி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கி.தண்டபாணி, பொதுக் குழு உறுப்பினர்கள் கே.பி. ஆர்.பாலமுருகன், எஸ்.பி. கண்ணன், பேரூர் செயலாளர் கே.வி.பி.சங்கர், பேரூராட்சி தலைவர் கோகிலா குமார்,துணை தலைவர் ஆர்.ராமர்,ஒன்றிய அவைத் தலைவர் ஆர்.இராம மூர்த்தி, பொருளாளர் ஜி.சுப்பிரமணியன், ஒன்றிய அவைத் தலைவர் எஸ்.ஆர். கோபு, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் தாணூர் சிவக்கொழுந்து, ஆர்.சிங்காரவேல், எஸ்.கஜேந்திரன், வி.செல்வபாரதி, ஆர். சேகர், பேரூர் துணை செயலாளர் விடுதலை சு.சேகர், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் வெ.கௌதமன், தொகுதி தொழில் நுட்ப அணி டி.பிரகாஷ், ஆர்.கோபாலகிருஷ்ணன், ஏ.விஜயசந்திரன், எம்.ஆர். ஜோதி, கோ.ஆறுமுகம், டி.முத்து குமாரன், ஆர். கௌரி, பி.குமாரி. உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாவட்ட பிரதிநிதி டி. பழனி நன்றியுரை யாற்றினார்.

## விளாங்குடி பேரூராட்சி முன்னாள் கவுன்சிலர்

# முத்துப்பேர்க்கினியன் முதலாமாண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

### எம்.அமுதா முத்துப்பேர்க்கினியன் - முன்னணியினர் பங்கேற்பு!



மதுரை, மார்ச் 7-

மதுரை மாவட்டம் - விளாங்குடி பேரூராட்சி செயலாளராகவும், வட்டச் செயலாளராகவும் 4 முறை பணியாற்றியவர். பேரூராட்சி 2வது வார்டு கவுன்சிலராக மக்கள் பணி மேற்கொண்டவருமான முத்துப்பேர்க்கினியன் அவர்களின் முதலாமாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (7.3.2024 - வியாழக்கிழமை) மாலை அவரது இல்லத்தில் (ஆசாத் தெரு, கூடல் நகர், மதுரை) நினைவில் வாழும் முத்துப் பேர்க்கினியன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில் மதுரை மாநகராட்சி 2வது வார்டு கவுன்சிலர் எம்.அமுதா முத்துப்பேர்க்கினியன் உள்ளிட்ட கழக முன்னணியினர், தோழர்கள் பங்கேற்று அவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்துகின்றனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் சமூக நலன் மகளிர் உரிமைத்துறை சார்பில் 221 பெண்களுக்கு திருமண நிதியுதவியுடன் தாலிக்கு தங்கம் வழங்கும் விழாவில் கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு பெண்களுக்கு தாலிக்கு தங்கம் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் திருமதி ச.வளர்மதி, மாவட்ட சமூக நல அலுவலர் (பொறுப்பு) திருமதி வசந்தி ஆனந்தன், ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் சேஷாவெங்கட், புவனேஸ்வரி, சந்தியானந்தம், நிர்மலா சவுந்தர், அனிதா குப்புசாமி, நகர மன்ற தலைவர்கள் சுஜாதா வினோத், ஹரிணி, தில்லை அ.தமிழ்ச்செல்வி, அசோகன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் அம்பிகா பாபு, பாதுகாப்பு அலுவலர் கீதா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கோ. இளங்கோவன்

மார்ச் 7 (2015)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீதும் கழகத்தின்மீதும் தன் இறுதிமூச்சு வரை பற்று கொண்டிருந்தவர்.

உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்த இவர், மாநிலம் முழுவதும் தலைமைக் கழகப் பேச்சாளராக 'துறவி' எனும் புனைப் பெயருடன் கழகக் கொள்கையினை பரப்பியதுடன், மாவட்ட அவைத்தலைவர், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை கழகத்தில் வகித்தவர்.

1971, 1977 ஆகிய இரண்டு முறை நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக திருச்சி மத்திய சிறையில், ஓராண்டு காலம் நெருக்கடிகால "மிசா" கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.3.2024) முகாம் அலுவலகத்தில், சென்னை இராணி மேரி கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் திருமதி ஆ.அமிர்தகௌரி சந்தித்து பேசினார். உடன் அவரது கணவர் பேராசிரியர் மா.செல்வராசன், இங்கிலாந்தில் பணியாற்றும் அவரது மகள் மருத்துவர் செ.வண்ணமலர், அவரது மருமகன் மருத்துவர் சு.கண்ணன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.3.2024) முகாம் அலுவலகத்தில், முன்னாள் அமைச்சரும், திருநெல்வேலி மத்திய மாவட்ட கழக பொறுப்பாளருமான டி.பி.எம். மைதீன்கான், அண்மையில் திருமணமான தனது பேத்தி அஃப்சான் நபோரா – ஜவஹர் அலி ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் அமைக்கப்பட்டுள்ள

# கலைஞர் உலகம் அருங்காட்சியகம்!

## பொதுமக்கள் ஆர்வமுடன் நேற்று பார்வையிட்டனர்!

சென்னை, மார்ச் 7-

சென்னை மெரினாவில் முத்தமிழறிஞர் கலைஞருக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில், நவீன வசதிகளுடன் கூடிய கலைஞர் உலகம் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.



இந்த அருங்காட்சியகத்த மார்ச் 6 முதல் பொதுமக்கள் பார்வையிட தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது. இந்த நிலையில் இணையம் மூலம் முன்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்ற பொதுமக்கள் கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை ஆர்வமுடன் ரசித்தனர். உள்ளே சென்று திரும்பி வெளியே வர ஒன்றரை மணி நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

7D தொழில்நுட்பத்தில் சென்னை - மன்னை விரைவு வண்டி பயணம், கலைஞர் புகைப்படங்கள், கலை அறிஞர் கலைஞர் என்ற தலைப்பில் குறும்படம் என அருங்காட்சியகம் முழுவதும் நவீன தொழில்நுட்பங்களால் வடிவமைக்கப்பட்டிருப்பதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை காலை 9 மணி முதல் இரவு 8 மணிக்குள் பார்வையிட அனுமதி வழங்கப்படும் என்றும், பொதுமக்கள் தங்களுக்கு வசதியான காட்சி நேரத்தைத் தேர்வு செய்து முன்கூட்டியே அனுமதிச் சீட்டினை கட்டணமில்லாமல் பெற்றுக் கொள்ளலாம் என தமிழ் நாடு அரசு தெரிவித்துள்ளது.

ஒருவர் ஒரு அலைபேசி எண் மூலம் அதிகபட்சமாக 5 அனுமதிச் சீட்டுகள் வரை பெற்றுக் கொள்ள இயலும் என்றும் தமிழ்நாடு அரசு கூறியுள்ளது.

பா.ஜ.க.,வுக்கு ஆதரவாக செயல்படுவதற்கு கடும் கண்டனம்

# எஸ்.பி.ஐ. வங்கியைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்!

## தமிழ்நாடு முழுவதும் எஸ்.பி.ஐ., கிளைகளை முற்றுகையிட்டு முழக்கம்!

சென்னை, மார்ச் 7-

தேர்தல் பத்திரங்கள் விவகாரத்தில் பா.ஜ.க., வின் ஊழலுக்கு துணைப் போகும் எஸ்.பி.ஐ., வங்கியைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் உள்ள அந்த வங்கியின் கிளைகளை முற்றுகை யிட்டு கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேர்தல் பத்திரம் விவகாரத்தில் ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு ஆதரவாக செயல்படுவதாக பாரத ஸ்டேட் வங்கிக்கு கண்டனங்கள் வலுத்து வருகின்றன. இந்நிலையில், இவ்வங்கிக்கு எதிராக அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை அறிவித்து நடத்தி வருகின்றன. அந்தவகையில், எஸ்.பி.ஐ., வங்கியைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள எஸ்.பி.ஐ., மண்டல அலுவலகம் முன்பு அக்கட்சியினர் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.ராம கிருஷ்ணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், அக்கட்சியினர் திரளானோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராகவும், பாரத ஸ்டேட் வங்கியைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பினர்.

காரைக்குடியில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பங்கேற்றார்!

காரைக்குடி, மார்ச், 7-

கழகத் தலைவரும் முதல்வருமான தளபதி அவர்களின் பிறந்த நாளன்று மார்ச் 1ம் தேதி காரைக்குடி அரசு மருத்துவமனையில் பிறந்த இரண்டு குழந்தைகளுக்கு சமூக ஆர்வலர் செந்தில்நாதன் ஏற்பாட்டின் பேரில் இரண்டு கிராம் தங்க மோதிரங்கள் மற்றும் பழங்கள் குழந்தைகளுக்கான உடைகள் மற்றும் அமைச்சரின் சார்பில் நிதி உதவியினை மாவட்டக் கழக செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னத் துரை கே.ஆர்.ஆனந்த் நா.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன், காரைக்குடி நகர்கழக செயலாளர் என்.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதாசெந்தில், திருமதிகலாகாசி நாதன், தெரசா, ஒன்றிய கவுன்சிலர் சொக்கலிங்கம், புதுவயல் பேருர்கழக செயலாளர் பக்ருதீன்அலிபாய், அரசு வழக்கறிஞர் பாலசுப்பிர மணியம், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், அரசுமருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். அதனை தொடர்ந்து 5ம்தேதி மருத்துவமனையில் பிறந்த ஆறு குழந்தைகளுக்கு பழங்கள் மற்றும் நிதி உதவியினை அமைச்சர் பெரியகருப்பன் வழங்கினார்.






# இடம் பொருள் கலைஞர் 60

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் தென்னை நல வாரியம்...**







# தென்னை நல வாரியம்!

## விவசாயிகளின் கண்ணீர் துடைத்த உதவி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கோட்டையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், அவரது உதவியாளராக இருந்த சண்முகநாதன் அவர்களின் அறையில் கலைஞரின் புகைப்படங்கள் மாட்டப்பட்டிருக்கும்.

அதில் ஒரு படம், தென்னை மரத்தில் கலைஞர் லேசாகச் சாய்ந்து நிற்பது போன்ற ஒரு வரவேற்புப் படம் இருந்தது. அந்தப் படத்துக்குக் கீழே, ஔவையாரின் மூதுரைப் பாடல் ஒன்று இடம்பெற்றிருக்கும். அந்தப் பாடல் இது:

***“நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டா நின்று தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்”.***


அதாவது, நற்குணமுடைய ஒருவருக்கு நாம் ஓர் உதவி செய்தால், அந்த உதவிக்குப் பதில் உதவியை அவன் எப்பொழுது நமக்குச் செய்வான் என்று ஐயுற வேண்டாம். ஏனெனில், எப்படி ஒரு தென்னை மரமானது, தன் அடிப்பகுதியால் நிலத்திலிருந்து உறிஞ்சிய நீரை, நுனிப் பகுதியால் சுவையுள்ள இளநீராக்கித் தானே தருகிறதோ, அவ்வாறே, அந்த மனிதரும் தகுந்த நேரத்தில் தானாக முன்வந்து நமக்குப் பதில் உதவியைக் கட்டாயம் செய்திடுவார் என்பதுதான் இந்தப் பாடலின் பொருள்.

‘பிறர் நமக்குச் செய்யும் உதவிக்கு நன்றி தெரிவிப்பது நமது கடமை. ஆனால், பிறருக்கு நாம் செய்த உதவிக்கு நன்றி எதிர்பார்க்கக் கூடாது’ என்ற தந்தை பெரியாரின் வழி வந்தவராயிற்றே கலைஞர். அதனால், அவர் எந்தப் பிரதிபலனும் இல்லாமல் தென்னை விவசாயிகளுக்குச் செய்த மாபெரும் உதவி, தென்னை நலவாரியம்.

### தென்னையில் சாதிக்கும் தமிழ்நாடு

‘பிள்ளையைப் பெத்தா கண்ணீரு, தென்னையைப் பெத்தா இளநீரு’ என்பது ஒரு பாடல் வரி. பெற்றெடுத்த பிள்ளைகள் கூடக் கைவிட்ட காலத்தில், பெறாமல் வளர்த்த தென்னை, தாகத்துக்காவது இளநீர் தரும் என்பது தமிழர்களின் நம்பிக்கை. ஆனால், அதே தென்னையை, கன்றாக நடும்போது அதற்குத் ‘தென்னம்பிள்ளை’ என்று அழைக்கும் நம் மக்களின் அன்பை எப்படி மெச்சுவது?

தென்னிந்தியாவில் தென்னைக்கு மிக முக்கிய இடமுண்டு. இந்தத் தென்னை வளர்ப்பில் கேரளத்துக்கு அடுத்த இடத்தில் தமிழ்நாடு உள்ளது. இங்கு சுமார் 4.4 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில், தென்னை சாகுபடி நடக்கிறது. 2022-ஆம் ஆண்டின் ஒன்றிய அரசுத் தரவுகள் படி, தமிழ்நாட்டில் ஒரு ஹெக்டேருக்கு 11,526 தேங்காய்கள் வீதம் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. அது தேசிய சராசரியான ஒரு ஹெக்டேருக்கு 9,123 தேங்காய்கள் என்பதைவிட அதிகம்.



நீலகிரி மாவட்டம் தவிர்த்து, ஏறத்தாழ தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் காணப்படும் தென்னையின் அனைத்துப் பாகங்களும் பயன் தரக்கூடியதாக இருப்பதால், அதனைக் ‘கற்பக விருட்சம்’ என்றும், ‘ஆயுள் காலப் பயிர்’ என்றும் அழைக்கிறார்கள். கவனமாகப் பராமரித்து வந்தால் சுமார் நூறு ஆண்டுகள் வரை கூட பலனளிக்கும் இந்தப் பணப் பயிர்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தென்னைக்கு நலவாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பது தென்னை விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. அந்தக் கோரிக்கை தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார் மன்றாடியார் அவர்களது தலைமையில், கலைஞரிடம் எடுத்துச் செல்லப்பட்டது. அவர்களின் கோரிக்கையில் இருந்த நியாயங்களைப் புரிந்துகொண்ட கலைஞர், அதனை நிறைவேற்றும் விதமாக, 2010-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 அன்று ‘தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம்’ அமைத்தார். அந்த வாரியத்துக்கு ராஜ்குமார் மன்றாடியாரையே தலைவராகவும் நியமித்தார்.

### தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம்

2010-இல் தென்னை நலவாரியம் தொடங்கும் முன்பே, 2000 ஆண்டு ஆகஸ்ட் 3 அன்று ‘தமிழ்நாடு தென்னை மேம்பாட்டுக் குழுமம்’ என்ற ஓர் அமைப்பை கலைஞர் ஏற்படுத்தினார். தமிழ்நாட்டிலே உள்ள தென்னை மரங்களை நோயிலிருந்து காலத்தே காப்பாற்றுதல், தென்னைச் சாகுபடியை மேம்படுத்துதல், தென்னைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுடைய நலன், தென்னை சார்ந்த உபதொழில்களை ஊக்குவித்தல் ஆகியவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு இந்தக் குழுமம் செயல்பட்டது.

### ரேஷன் கடைகளில் தேங்காய் எண்ணெய்

தமிழ்நாடு முழுவதும் உள்ள தென்னை விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, நோய்ப் பாதுகாப்பு, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட அனைத்து வகையான தேவைகளுக்கும் பயிற்சி, வழிகாட்டுதல் என வாரியம் செயல்பட்டது.

அந்த நேரத்தில், தேங்காய் எண்ணெயின் பயன்பாடுகள் பற்றியும், பாமாயில் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் கார்ப்பரேட் கம்பெனிகள் தேங்காய் எண்ணெய் பற்றித் தவறாகப் பரப்பியிருந்த தகவல்களையும் ஆதாரப்பூர்வமாக மறுத்து, அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஒருவர் எழுதிய புத்தகத்தை ராஜ்குமார் மன்றாடியார் அவர்கள் கலைஞரிடம் கொடுக்க, அதை உடனே படித்து முடித்து விட்டு தென்னை வாரியத் தலைவர், விவசாயத் துறை அமைச்சர், விவசாயத்துறை மற்றும் எண்ணெய் வித்துத் துறைச் செயலாளர் ஆகியோருடன் ஆலோசித்துவிட்டு, தமிழ்நாடு முழுவதும் உள்ள ரேஷன் கடைகளில் பாமாயிலுக்குப் பதிலாகத் தேங்காய் எண்ணெய் விநியோகிக்கச் சொல்லி உத்தரவிட்டார் என்று தி.மு.க. சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி தனது **‘நான் கண்ட கலைஞர்’** என்கிற புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.

“மேலும், சத்துணவுக் கூடங்களில் சமைப்பதற்கு, சுத்தமான தேங்காய் எண்ணெய் பயன்படுத்தவும் உத்தரவு பிறப்பித்தார்கள். குழந்தைகளுக்குக் கூடுதல் சத்தான ஆரோக்கியமான உணவுக்கும் வழி வகுத்தார். கலைஞர் அவர்களின் இந்த முடிவால், தென்னை விவசாயிகளுக்கும் கூடுதல் வருவாய் கிடைத்தது” என்கிறார் கார்த்திகேய சிவசேனாபதி.

### பட்டுக்கோட்டை தென்னை வணிக வளாகம்

தென்னை நல வாரியம் அமைத்த கையோடு, 2011-ஆம் ஆண்டு பிப்ரவரி 27 அன்று தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் 8 கோடி ரூபாய் மதிப்பில் தென்னை வணிக வளாகம் அமைக்கப்பட்டு, கலைஞர் அவர்களால் காணொலி மூலம் திறந்து வைக்கப்பட்டது. தென்னையை மதிப்புக் கூட்டுப் பொருளாக மாற்ற, இந்த வணிக வளாகம் உதவும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அடுத்து வந்த அரசு, அந்த வளாகத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் சீரழித்தது.

அந்த வணிக வளாகத்தின் திறப்பு விழாவில், கலைஞர் இப்படிச் சொன்னார்: “தமிழ்ப் பெருமக்கள், தமிழகத்திலே எத்துணைச் சிறப்பாக ஒவ்வொரு நாளும் தமிழகத்தின் எதிர்கால எழிலை, எதிர்கால ஏற்றத்தை, எழுச்சியை நினைத்தவாறு இந்த அரசு நடைபெறுகிறது என்பதை எண்ணிப் பார்த்து, தங்களுடைய ஆதரவைத் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கேட்கின்ற ஆதரவு கட்சியின் பெயரால் அல்ல... ஆட்சியின் பெயரால்... தமிழ்ச் சமுதாயத்தின் பெயரால்..!”

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாசிச சக்திகளைத் தோற்கடித்து, ‘நாற்பதும் நமதே’ என்று வெற்றி முழக்கம் செய்வதுதான் கலைஞருக்கு நாம் செலுத்தும் நன்றியாக இருக்கும்.

**...வலம் வருவோம்**


### தெற்கு வாழ்கிறது, வழிகாட்டுகிறது!

ஒரு காலத்தில் ‘வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது’ என்றார் அண்ணா. ஆனால், இன்றைக்கோ “இந்தியாவின் எதிர்காலத்தைப் பார்க்க, தெற்கே செல்லுங்கள்” என்ற தலைப்பில் ‘கவர் ஸ்டோரி’ தீட்டியிருக்கிறது ‘தி எகனாமிஸ்ட்’ எனும் சர்வதேச இதழ். இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள்தொகையில் தென் மாநிலங்கள் 20 சதவிகிதம் மட்டுமே பங்கு வகிக்கின்றன. ஆனால், இந்தியாவின் வளர்ந்த மற்றும் நகரமயமான மாநிலங்களாக இவை இருக்கின்றன. இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலரும் தெற்கு நோக்கியே பறக்க விரும்புகிறார்கள். கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவின் ஒட்டுமொத்த அந்நிய முதலீடுகளில் 35 சதவிகிதத்தை ஈர்த்திருக்கின்றன. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், தென் மாநிலங்கள் மட்டுமே 31 சதவிகிதப் பங்கைக் கொண்டிருக்கின்றன. சிறப்பான கல்வி, அரசு நிர்வாக வசதிகளையும் இந்த மாநிலங்கள் கொண்டுள்ளன.

இந்தியாவின் மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 46 சதவிகிதம் தென் மாநிலங்களுக்குச் சொந்தமானது. புத்தாக்கத் தொழில் நிறுவனங்களில் (ஸ்டார்ட் அப்) ‘யுனிகார்ன்’ அங்கீகாரத்தை எட்டிய நிறுவனங்களில் 46 சதவிகிதத்தை தென் மாநிலங்களில் இருந்து இயங்குபவை. தகவல் தொழில்நுட்ப மென்பொருள் ஏற்றுமதிச் சேவையில் 66 சதவிகிதம் தென் மாநிலங்கள் கொண்டிருக்கின்றன. உலகளாவிய தணிக்கையாளர்கள், வழக்கறிஞர்கள், வடிவமைப்பாளர்கள், கட்டடக் கலைஞர்கள் மற்றும் பிற வல்லுநர்கள் தென்னிந்தியாவில்தான் 79 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள் என்று தெற்கின் புகழை அடுக்கியிருக்கிறது அந்த இதழ்.

நமது முதலமைச்சர் கூறியதைப் போல ‘தெற்கு வாழ்கிறது, வடக்கையும் வாழ வைக்கிறது, வழிகாட்டுகிறது’!

### ஃப்ளாஷ்பேக்



அருணா ராமகிருஷ்ணன்



#### நல்ல நேரம்!

1980-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 அன்று சென்னை பெரியார் திடலில் எனது பெற்றோர் ராமகிருஷ்ணன்- உஷா ஆகியோருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் முன்னிலையில், சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. திராவிட உணர்வுடன் கழகப் பணியாற்றிய என் தந்தை, நாளிதழில் கட்சித் தொண்டர்களுக்கு அழைப்பு விடுக்க, ஆன்மிக நம்பிக்கை கொண்ட பெண் வீட்டார் சுபமுகூர்த்த நேரம் குறிப்பிட்டு, திருமண அழைப்பிதழை தலைவர் கலைஞரிடம் வழங்கினர். திருமணம் முடிந்த பிறகு வாழ்த்துரை வழங்குவதாக இருந்த கலைஞர் அவர்கள், தனது உரையை முன்னரே தொடங்கி முடிக்க, அழைப்பிதழில் குறிப்பிட்ட நல்ல நேரம் கடந்துபோனது. பின்பு மாலை எடுத்து மணமக்களுக்குக் கொடுத்து “இருமனம் அன்போடு சங்கமிக்கும் திருமண பந்தம் துவங்கும் நேரம் அது நல்ல நேரமே” என்று மணமக்களை வாழ்த்தி இருக்கிறார்.

**–அருணா ராமகிருஷ்ணன், கொளத்தூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### திட்டங்கள் உதயம்!

1969-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் தேதி முதல், தனது ஒவ்வொரு பிறந்த நாளிலும், கழக ஆட்சிகளில் மக்கள் நலப்பணித் திட்டங்கள் அறிவிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் கலைஞர். வீர தீர செயல்களுக்குத் தங்கப்பதக்கம், அரசு ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம், கருணை அடிப்படையிலான வேலை, கை ரிக்ஷா ஒழிப்பு, கண்ணொளித் திட்டம், விதவை மறுமணத் திட்டம், தொழுநோய் - பிச்சைக்காரர் நலவாழ்வு, காவல் ஆணையங்கள், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் உள்ளிட்ட பல திட்டங்கள் அவர் பிறந்தநாளின்போது உதயமானவை.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

410

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131